# மித்ரா டைம்ஸ்

MITRA TIMES

தமிழ் & ஆங்கிலம் மாத இதழ்
Tamil & English Monthly

ஆண்டு–3 | இதழ்–11 | ஏப்ரல்–2018 | விலை ரூ.20/– | ஆண்டு சந்தா ரூ.240/–
Volume - 3 | Issue -11 | April - 2018 | Price Rs.20/- | Annual Subscription Rs.240/-




## எரியும் தீயில் எண்ணெய் ஊற்றாதீர்

-ஆசிரியர் கடிதம்



## கனல் கக்கும் காஷ்மீர்

-வழக்கறிஞர் **வே.காசிநாதன்** கட்டுரை

## முன்னேறத்துடிக்கும் இளைஞர்களுக்கு முன்னுதாரணம் "அபிராமி" கீர்த்திவாசன்


## மூன்றேமாதத்தில்... குழந்தைச்செல்வம் தரும் சதுரகிரி அமிர்தம்!

உ

ஸ்ரீம் அகத்திய சிவசித்தரே நமஹ

அன்னை இருக்கும் இடத்தில் சர்வமங்களம் பெருகும்!







உக்ரப்ரத்யங்கிரா

உங்கள் குடும்ப நன்மைக்கு தொழில் வளர்ச்சிக்கும் திருமணபாக்கியம், குழந்தைபாக்கியம் கிட்ட, கிரதோஷங்கள் நிங்க, பகை உணர்வு அகல, 64-வகையான சாபம், பாவம், நிவர்த்தி பெற அனைத்திலும் வெற்றி பெற தெய்வ அம்சத்துடன் வேள்வி குண்டத்தில் கடவுளை கண்முன்னே காணும்படி உங்கள் வாழ்வை வளமாக்கிட வீடு, அலுவலகம், தொழிற்சாலையில் ஹோமம் செய்திட. தங்கம் முலம் பூசப்பட்ட தெய்வயந்திரம் கிடைக்கும்.



பாலகிருஷ்ணர்

தொடர்பிற்கு:

தவத்திரு. சக்தி சுவாமிகள்

சிவஸ்ரீ ப்ரத்யங்கிரா சர்வசக்திபீடம்

9524591892

9499928479




சீரடிசாய்பாபா



ஆசீர்வதிக்கும் அன்னை



வீரசரபேஸ்வரர்



பாலப்ரத்யங்கிரா


# எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றாதீர்

**- ஆசிரியர் கடிதம்**

**மனிதர்கள் தங்களது உணர்வுகளை வெளிப்படுத்தும் ஒரு வழி கோபம். தான் சொல்வதைப் பிறர் கேட்காத போது, தான் விரும்பியது கிடைக்காத போது, தான் நம்பியவர்கள் தன்னை ஏமாற்றும் போது வெளிப்படுத்தும் உணர்வுகள் தான் கோபத்தின் வெளிப்பாடு. தன்னால் ஏற்படும் கோபம் தன்னாலேயே அடங்கி விடும்.**

கோபப்படுகின்றவன் வெளிப்படையானவன். ஆனால் கோபமூட்டுகின்றவன், நல்லவனைப்போல் தன்னைக் காட்டிக்கொண்டு திரைமறைவில் சதிவேலை செய்கின்றவன். இயல்பான கோபம் உடனடியாகத் தணிந்துவிடும். அதனால்தான் ‘ஆறுவது சினம்’ என்றாள் அவ்வை. பிறரால் தூண்டப்படுகின்ற கோபமோ, தணியும் போதெல்லாம் மீண்டும் மீண்டும் தூண்டி விடப்பட்டுக் கொண்டே இருக்கும். அதுதான் ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்துகிறது.தெருவில் இரண்டு பேருக்கிடையே வாய்த்தகராறு. அதைச் சுற்றி நின்று வேடிக்கை பார்ப்பதற்கு ஒரு கூட்டம்.

இருவரும் எப்போது கட்டிப்புரண்டு உருளுவார்கள், யார் முதலில் கத்தியை எடுத்து அடுத்தவனைக் குத்துவான், இந்தச் சண்டை இன்னும் எவ்வளவு நேரம் நீடிக்கும். இப்படித்தான் அந்தக் கூட்டம் எதிர்பார்த்து நிற்கிறது. சண்டையின் வேகம் கொஞ்சம் தணிந்து, இருவரும் விலகிச்செல்ல தயாராகி விடுகிறார்கள். வேடிக்கை பார்க்கும் கூட்டத்திலிருந்து ஒரு குரல் வருகிறது. ‘எங்கிட்ட மட்டும் ஒருத்தன் இப்படி பேசியிருந்தா, இந்நேரம் அவன் மண்டைய பொளந்திருப்பேன்’ என்கிறான் ஒருவன் .‘அதுக்கெல்லாம் நெஞ்சில துணிச்சல் வேணும். இவன்க சும்மா... வெறும் வாய்ச்சவடால்தான்’ என்று கிளறிவிடுகிறான் இன்னொருவன். சூடு தணிந்த சண்டை மீண்டும் அனல் தெறிக்கத் தொடங்குகிறது. கைகலப்பு ஏற்பட்டு, ஒருவனுக்குப் பல் உடைகிறது.



ஒருவனுக்குக் காது கிழிந்து ரத்தம் வழிகிறது. அதன் பின்னர்தான், தூண்டி விட்டு வேடிக்கை பார்த்தவர்களுக்கு ஒரு மனநிறைவு. அப்படித் தூண்டிவிடு கிறவர்கள் தெருவீதி களில் மட்டு மல்ல, உங்கள் அக்கம் பக்கத்திலும் இருப் பார்கள்; உங்கள் நண்பர் களிலும், உங்க ளுடைய சொந்த உறவினர் களிலும் இருப்பார்கள். இருவருக் கிடையே புகுந்து சண்டையைத் தூண்டிவிடு வது மிக சுலபம். அது ஓர் அற்பபுத்தி. அத்தகைய அற்ப சிந்தை உடையவர்களால் எத்தனை ஊர்களில், எத்தனை எத்தனை குடும்பங்களில் பிரிவினைகளும், விரோதங்களும், படுகொலைகளும் நிகழ்ந்து விடுகி ன்றன.

சண்டை ஏற்படுகின்ற இடங்களில் சமாதானம் செய்கின் றவர்களைக் காண்பது அரிது.

கலவரம் ஏற்படும் தருணங்களில், சமாதானம் பண்ண அங்கு ஒருவர் இருந்துவிட்டால் போதும். மிகப்பெரிய ஆபத்துகளைத் தவிர்த்து விடலாம். ஆனால் எரிகிற நெருப்பில் எண்ணை ஊற்றுவதுபோல் செயல்படுகிறவர்கள்தான் ஏராளம். அவர்களால் அல்லவா பகையும் வெறுப்பும் சண்டைகளும் அணையா நெருப்பாய் பல்வேறு இடங்களில் பற்றி எரிந்துகொண்டே இருக்கின்றன. இனி உறவே இல்லை என்று சொந்தங்கள் பிரிந்து செல்வதற்கும், ஒருவரை ஒருவர் அழிக்கத் துடிப்பதற்கும் ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள கோபம்தான் காரணம்.

தற்கொலை என்றாலும், கொலைக்குற்றம் என்றாலும் ஓர் உணர்ச்சி வேகத்தில் நிகழ்ந்து விடுவதுதான். அப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடுகி றவர்கள் மறைமுகமாகவோ நேரடியாகவோ யாரோ ஒருவரால் அல்லது சிலரால் தூண்டிவிடப்படுகிறார்கள் என்பதே உண்மை. சாதாரண தகராறு ஆகட்டும், வெட்டுக்குத்துச் சண்டையாகட்டும், கோபம்தான் அடிப்படை. தனியே அமர்ந்து சிலநிமிடம் சிந்தித்தால் கோபத்தின் வேகம் குறைந்து விடும்.

ஆனால் சுற்றியிருப்பவர்கள் சிந்திக்க விட மாட்டார்கள். இருவர் முட்டி மோதிக் கொண்டால், அதுதான் அவர்களுக்குத் திருவிழாக்கூத்து. ஒரு வீட்டின் அண்ணன் தம்பிக்குள் மோதல் வந்துவிட்டால், பக்கத்து வீட்டுக்காரன் எட்டிப் பார்ப்பான். வழியில் தம்பியைச் சந்தித்து மெல்ல பேச்சுக் கொடுப்பான்.

‘என்னதான் இருந்தாலும் உங்க அண்ணன் அப்படி செஞ்சிருக்கக் கூடாது. நீங்களும் இவ்வளவு ஏமாளியா இருக்கக் கூடாது. பேசிப் பாருங்க. சரிப்பட்டு வரலேன்னா, இருக்கவே இருக்காரு எனக்குத் தெரிஞ்ச வக்கீல்’ என்று அவன் காதில் ஓதிவிடுவான்.

அடுத்தவர்களின் குடும்பம் ரெண்டுபட்டால் சிலருக்கு மகிழ்ச்சி. அதற்கு அவர்கள் கையாள்கின்ற ஒரே உத்தி, ஒருவர் மீது ஒருவருக்குக் கோபத்தைத் தூண்டிவிடுவதுதான். அப்படிப்பட்டவர்களிடம் நமக்கு அதிக எச்சரிக்கை அவசியம். பெற்றோருக்கு எதிராகப் பிள்ளைகளையும், பிள்ளைகளுக்கு எதிராகப் பெற் றோரையும் கோபமூட்டி முறுக்கேற்றி விடுகின்ற உறவினர்கள் உண்டு.

உங்கள் குடும்பத்திற்குள் நுழைந்து கபட நாடகம் ஆடுவார்கள். நம்பி விடாதீர்கள்.மாமியாருக்கு விரோதமாக மருமகளையும், மருமகளுக்கு விரோதமாக

-என் எண்ணம்

மாமியாரையும் கிளப்பி விடப்பார்ப்பார்கள். செவி சாய்த்து விட்டால் நஷ்டம் உங்கள் குடும்பத்திற்குதான். மறந்து விடாதீர்கள்.

சிலர் உங்களைக் கோபப்படுத்தி வம்புச் சண்டைக்கு இழுப்பார்கள். அந்நேரம் நீங்கள் அமைதி காத்துக் கொள்ளுங்கள். அதுதான் உத்தமம். ஒருமுறை புத்தபெருமானைக் காண வந்த ஒருவன், அவரைக் கடுமையான வார்த்தைகளால் திட்டித் தீர்த்தான். அவன் பேசியவை, கேட்போரையெல்லாம் கோபமடையச் செய்தன.

ஆனால் புத்தரோ எதுவும் பேசவில்லை. அவன் கூறியதையெல்லாம் கேட்டுக்கொண்டு அமைதியாக இருந்தார். சீடர்கள் அவரை வியப்புடனும் கேள்விக்குறியுடனும் பார்த்தனர்.

வந்தவன் போனபின்பு புத்தர் சீடர்களைப் பார்த்து ‘உங்களுக்கு ஒருவன் ஒரு பொருளைக் கொடுக்கிறான். அதை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், அது திரும்ப அவனிடம்தானே போய்ச் சேரும். நிந்தனைகளும் அப்படித்தான்.

அவற்றை நாம் பொருட்படுத்தாவிடில், அவையும் அவனையேதான் சாரும்’ என்றார்.கோபம் பொல்லாதது. கோபமூட்டுதல் கொடியது. இந்த இரண்டிற்கும் நம்மை விலக்கிக் கொள்வது நம் வாழ்க்கைக்கு நல்லது.

அவசர யுகம், பரபரப்பான வாழ்க்கை, அன்றாட பணிச்சுமைகள், பல்வேறு பிரச்சினைகள், நேர நெருக்கடி எல்லாவற்றையும் சமாளித்தாக வேண்டும். சில சமயங்களில் கோபம் வந்துவிடுவது சகஜம்தான். ஆனால் ஒருவர் கோபப்படும்போது இன்னொருவர் அவரை அமைதிப் படுத்த வேண்டும்.கணவன் கோபப்பட்டால் மனைவி பொறுத்துக் கொள்வதில் ஒன்றும் கவுரவக் குறைச்சல் இல்லை. மனைவி கோபப்பட்டால் கணவன் பொறுமை காப்பதில் ஒன்றும் தன்மானப் பிரச்சினை இல்லை. உங்களிடையே மூன்றாம் நபர் தலையிட்டு கலகத்தை உண்டுபண்ண விட்டுவிடாதீர்கள்.

உங்கள் பிள்ளைகளுக்குள் சண்டை ஏற்பட்டால், அவர்களை சமாதானப்படுத்தி அன்பை வளரச் செய்யுங்கள். அதைவிட்டு, ஒரு பிள்ளையைப் பாராட்டியும் ஒரு பிள்ளையைப் பழித்தும் பேசத் தொடங்கிவிட்டால், அவர்களுக்குள் பகையை உருவாக்கி உங்கள் குடும்பத்திற்கு நீங்களே சரிவை ஏற்படுத்துகிறீர்கள் என்றுதான் அர்த்தம்.கோபத்தை வளரச் செய்தால் அது உள்ளங்களைப் பிரிக்கும். உறவுகளை அறுக்கும். பகையை வளர்த்துக் குடும்பங்களைத் தகர்க்கும்.

எனவே எப்போதும் நல்லவற்றைச் செய்யுங்கள். கோபத்தைத் தணியச் செய்வது மிகப்பெரிய தர்மம். அதனால் அன்பு பெருகும். உறவுகள் தழைக்கும். நன்மைகள் பிறக்கும்.

– எம்.எஸ்.மூர்த்தி


# மித்ரா டைம்ஸ்

மாத இதழ்

**மித்ரா 3 ஏப்ரல் 2018 டைம்ஸ் 11**

அச்சிட்டுவெளியிடுபவர்
ஆசிரியர்
**எம்.எஸ்.மூர்த்தி**

நிர்வாக ஆசிரியர்
**திருமதி. சுஜாதா மூர்த்தி**

செய்தி ஆசிரியர்
**தம்பி முருகானந்தம்**
9381788645
9789837069

இதழ் சிறப்பு ஆலோசகர்கள்
G. **ராம்மோகன்**
R. **குணசேகர்**

செய்தியாளர்கள்
ஒருங்கிணைப்பாளர்
**கவிஞர் மணிபாரதி**
9840895794

முதன்மை செய்தியாளர்
K.V. **ஈஸ்வரி**

நிர்வாக மேலாளர்
V. **மோகன்ராஜ்**

சட்ட ஆலோசகர்
V.N.**பிரசாத்** M.A.,B.L.,

**வடிவமைப்பு**
சிவா சௌந்தர்,
திருமதி.நிரோஷாதிலிப்

**விளம்பரம், சந்தா தொடர்புக்கு**
044-23743007/8

**அலுவலகம்:**
001, இன்ஞ்சக்கல் பிளாக், சித்ரா
அவென்யூ, 9, சூளைமேடு ஹைரோடு,
சென்னை94.
போன் : 044-23744661,23743007/8

**Whatsapp No. 8248585067**
**E-mail : mitratimes2015@gmail.com**
**Website : www.mitratimes.com**




# உள்ளே


உன்னால் முடியும் பெண்ணே! ஏ.எஸ். பொன்னம்மாள்.......... 6
கனல் கக்கும் காஷ்மீர்- வழக்கறிஞர் வே.காசிநாதன்.......... 8
கீர்த்திவாசன்.......... 10
கபாலிகான்.......... 12
நடந்தால் நாடெல்லாம் உறவே.......... 14
ஆன்மீகவாதியின் அருட்பணிகள்-சி.கோ. ரகுபதி ஆத்மா.......... 15
பாரதி கண்ட புதுமைப் பெண் டாக்டர் ரஜினி.......... 16
பாய் தொழிலை சுருட்டிய ஜி.எஸ்.டி.......... 18
பொது அறிவுக் குவியல்- எஸ். ஜானகி.......... 19
மூன்றே மாதத்தில் குழந்தைச் செல்வம்
தரும் சதுரகிரி அமிர்தம்.......... 20
இனி தேர்வுகளும்
ஸ்மார்ட் போனில்-எஸ். சுருதிலட்சுமி.......... 22
ஜெயித்துக்காட்டுவோம்-கீர்த்திவாசன்.......... 23
உலக நன்மைக்காக ஹோமம் .......... 24
நமக்குள் நாம் நூல்வெளியீட்டு விழா.......... 26
வைதேகி.......... 28
ஆரூர் தியாகராஜர் அற்புத தலம்.......... 30
உன் குறையை சரி செய்.......... 33
Yes Iam Changing.......... 35
Her Advise To Diabetics.......... 36
அவர் தான் எம்.ஜி.ஆர் .......... 38
பெத்த மனம் பித்து .......... 39
Invita tion.......... 43
பலன் தரும் பனங் கற்கண்டு மருத்துவ குறிப்புகள்.......... 44
சவலை வென்ற சரவணமுத்து.......... 45
சினிமா.......... 46
இது தான் உலகம்.......... 48
சூரியனைக் கண்டால் சுகமே.......... 49
பொருள் அறிவோமா- எஸ். சூர்யா.......... 50



# அதிக முறை சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அக்கா! நிலக்கோட்டை ஏ.எஸ்.பொன்னம்மாள்

**அரசியலில் பெண்கள் பிரகாசிப்பது அரிது. அதுவும் சூது, வாது, பொய், களவு என அனைத்தும் நிறைந்த பொதுவாழ்வில் ஒரு பெண் நிலைப்பதுவும் கடினம். ஆனால் அதிகம் முறை சட்டமன்ற உறுப் பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொன்னம்மாளின் புகழ் வெளியுலகிற்குத் தெரியாமல் இருந்து வந்தது. அவரைப்பற்றிய சிறு தொகுப்பினைத் தருகின்றோம்.**

திண்டுக்கல் மாவட்டம் அழகம்பட்டியைச் சேர்ந்தவர் ஏ.எஸ். பொன்னம்மாள். தன்னுடைய இளம்பிராயத்தில் இருந்தே காங்கிரஸ் கட்சியில் தீவிரமாக செயல்பட்டவர். சோழவந்தான் சட்ட சபை தொகுதியில் இருந்து 2 முறை காங் கிரஸ் கட்சி எம்.எல்.ஏ.வாக தேர்ந் தெடுக்கப்பட்டார்.

பின்னர் நிலக்கோட்டை தொகுதியில் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிட்டு வென்றார் பொன்னம்மாள். இதனைத் தொடர்ந்து நிலக்கோட்டை தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராகவும் மூப்பனாரின் தமிழ் மாநில காங்கிரஸ் வேட்பாளராகவும் போட்டியிட்டு வென்றவர் பொன்னம்மாள்.

தமிழகத்தின் மூத்த அரசியல் தலைவர் என்பதால் அனைவரும் அன்புடன் 'பொன்னம்மாள் அக்கா' என்றே அழைப்பர்.

மிக மூத்த அரசியல் தலைவராக இருந்தபோதும் மிகவும் எளிமையான மனிதராகவே வாழ்ந்தவர் பொன்னம்மாள். பொன்னம்மாள் தமிழக அரசின் பெருந்தலைவர் காமராஜர் விருது உள்ளிட்ட விருதுகளைப் பெற்றவர்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் நம்பிக்கையைப் பெற்ற தலைவராக பொன் னம்மாள் விளங்கினார். சட்டப்பேரவையிலும், பேரவைக்கு வெளியிலும் அனைத்துக்கட்சித் தலைவர்களுடன் நட்பு பாராட்டியவர். அதே நேரத்தில் ஆளுங்கட்சியினரின் தவறுகளையும் சுட்டிக்காட்டத் தயங்கியதில்லை. சட்டப் பேரவையில் காங்கிரஸ் மீது யாராவது அவதூறு பரப்பினால் அவர்களுடன் வாதம் புரிந்து உண்மையை நிலை நாட்டியவர். தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக அதிகம் முறை தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் தலைவர் இவர் ஒருவரே என்பது குறிப்பிடத்தக்கது.

***

## வெற்றி விவரம்:

***

*1957*
சோழவந்தான்
*1962*
சோழவந்தான்
*1980*
நிலக்கோட்டை







*1989*
நிலக்கோட்டை
*1991*
நிலக்கோட்டை
*1996*
நிலக்கோட்டை

என சுமார் 40 ஆண்டு களுக்கும் மேல் சட்டமன்ற உறுப்பின ராக பணியாற்றிய மூத்த உறுப்பினர் இவர் இதனால் புதிதாக தேர்ந் தெடுக்கப்பட்டு வரும் இளம் எம்.எல்.ஏக்கள், இவரை அக்கா என்று அழைப் பார்கள்.

பொது வாழ்க்கைக்கு வரும் பெண்கள் நீண்ட நாட்களுக்கு நிலைத்து நிற்பதில்லை சில விதிவிலக்குகள் உண்டு. குறிப்பாக சொல்ல வேண்டு மென்றால் செல்வி ஜெயலலிதாவை சொல்லலாம் அவர் முதலமைச் சராக இருந்தபோது இவர் சட்டமன்ற உறுப்பினராக பணி யாற்றி இருக்கிறார்.

எதிர் வரிசையில் இருந்த போதும் செல்வி.ஜெயலலிதா உடன் பாசத்துடன் பழகி வந்து இருக்கிறார். அதைப்போல தி.மு.க, தலைவர் கலைஞர் கருணாநி தியுடனும் சகோதர பாசத்துடன் பழகி வந்துள்ளார்.

பொது வாழ்வில் ஈடுபடும் பெண்கள் புகழோடு வாழ வேண்டும் என்று விரும்புபவர்கள் நிலக்கோட்டை பொன்னாம் மாளை முன் உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம்



# கனல்கக்கும் காஷ்மீர்





“ஒய்யாரக் கொண்டையில் தாழம்பூவாம் உள்ளே இருக்குமாம் ஈரும் பேணும்” என்பதுதான் இன்றைய காஷ்மீரின் நிலைமை எழில் கொஞ்சும் இயற்கை வளங்கள், பணம் கொழிக்கும் கனிம வளங்கள், விளை பொருட்கள், மனம் மகிழும் தட்பவெப்பம் இவை காஷ்மீரின் ஒரு பகுதி. இது அழகானது. ஊருக்கு உள்ளே சென்று பார்த்தால் இன்னொரு பகுதி தெரிகிறது. அது ஆச்சரியமானது. பீரங்கி வண்டிகள், துப்பாக்கிகள், ராணுவ லாரிகள், பங்குகள், மறைவிட மணல் மூடைகள், அசைந்தால்கூட சுட்டுவிடும் அசராத காவல் பணியாளர்கள், ஊர்வலம். அர்த்தால் போராட்டம், கல்வீச்சு, சாலை மறியல், கலவரம், துப்பாக்கிச் சூடு, எரிகுண்டுகள், கண்ணீர் புகை சாதனங்கள், என்னும் கைகலப்பு, அடிதடி, மோதல், மத வன்முறை, கற்பழிப்பு, கொலை, என்கவுண்டர் என்பன போன்ற இன்னொரு வகை. இது ஆபத்தானது. ஆச்சரியப்படத்தக்கது.

காஷ்மீரின் தால் ஏரி, குளிரும் குல்மார்க், பரவசமூட்டும் பாஹல்காம், சொக்க வைக்கும் சோன்மார்க் ஆகியவை காஷ்மீரின் வாழ்விடங்கள், பச்சைப் போர்வை போர்த்திய பரந்து உயர்ந்த நீண்ட மலைத் தொடர்கள், சூரிய ஒளியில் பொன்னை உருக்கி ஊற்றிய பிம்பத்தை பிரதிபலிக்கும் பனி படர்ந்த சிகரங்கல், பள்ளத்தாக்குகளின் இடையில் பாய்ந்து செல்லும் நீல நிற நீரோடைகள், மலைகளின் இடையில் உருவாகி, மத்திய சமவெளிகளில் நொங்கும் நுரையுமாகச் சீறிப்பாயும் ஜீவநதிகள், திரும்பிய பக்கமெல்லாம் திசை மறைக்கும் நெடிய பைன் மரங்கள், கண்களைக் கவரும் ப்ளூபெல், டெய்ஸி மலர்த் தோட்டங்கள் இவை மனதுக்கு மகிழ்வானவை. சாலைகள் தோறும் ஆப்பிள் தோட்டங்கள், அக்ரூட் மரங்கள், பாதம் முந்திரி, குங்குமப்பூ செடிகள், அகில், சந்தனம், ரோஸ், பேரீட்சை இந்த விளைபொருட்களின் கிடங்கு காஷ்மீர். மொத்தத்தில் காஷ்மீரும் அழகு, காஷ்மீர் மக்களும் அழகு,



இதுதான் ஆபத்திற்குக் காரணம். காஷ்மீரின் வளமும் வனப்பும் பாகிஸ்தானின் கண்களை உறுத்துகின்றன. இந்தியாவுக்குள் நுழைய ஏதுவான இடமென சீனா கருதுகிறது. எல்லையில் பாதுகாப்பு வேண்டுமானால் காஷ்மீர் இந்தியாவின் கட்டுக்குள் இருக்க வேண்டுமென இந்தியா கருதுகிறது. ஆக காஷ்மீர் என்ற பெண்ணுக்கு கடுமையான போட்டி.

நிலப்பரப்பை அடைய நினைப்பவர்கள் மக்களைப் பகடைக் காய்களாக ஆக்கிய நிலைமையை நேரில் பார்க்கிறோம். வரலாற்றின் வழித்தடங்களில் சற்றுப் பின்னோக்கி நடந்து பார்த்தால் இன்றைய சீர்கேட்டிற்கு யாரெல்லாம் காரணம் என்று தெரியும்.

சரித்திர நிகழ்வுகளைச் சாடுவது நமது எண்ணமில்லை. என்றாலும் சரித்திரக் கேடாக முடிந்து போனதை சரியென்று ஏற்றுக் கொள்ள முடியாது.பண்டிட்களும், பாகிஸ்தானியர்களும் மதப்பரீட்சை பார்க்கும் களமாக மாறிப்போனதுதான் வேதனை. 80 சதவீதம் இஸ்லாமியர்கள் வாழ்ந்தபோது இந்து அரசர்கள். இந்துக்கள் அதிகமாக வாழுமிடத்தில் இஸ்லாமிய அரசர்கள். காலங்காலமாக ஊட்டி வளர்க்கப்பட்ட மத வெறி, மாண்புகளையும், மனித நேயத்தையும் மாய்த்து விட்டது. மக்களை வசியப்படுத்த ஆஸாத் காஷ்மீர் என்றும், பிரிவினை வேண்டுமென்றும், தனி நாடு தான் சாசுவதம் என்றும், தர்க்கம் பண்ணும் தலைவர்கள், மக்களைத் திரட்டிக் காட்டி, மாய்மாலம் செய்து மாற்றாரிடம் பணம் பறிக்கும் பச்சோந்தித் தலைவர்கள், ஹவாலா மூலம் இலைஞர்களை வன்முறைக் களத்தில் இறக்கிவிடும் போலி அரசியல்வாதிகள், பிழைப்புக்காக புரோக்கர் தொழில் செய்யும் பிரிவினைவாதிகள், பெண்களைப் போராட்டக் களத்தில் இறக்கிவிடும் பேடிகள், வேலியே பயிரை மேயும் நிலையில் பணியாற்றும் சீருடைப் பணியாளர்கள், எல்லைக்காவல், ராணுவ வீரர்கள், கையாலாகாத அரசு அதிகாரிகள், துணிச்சல் முடிவு எடுக்க முடியாத உயர்மட்ட அலுவலர்கள், சட்டத்தைச் சரியாகக் கையாளத் தெரியாத சண்டியர்கள், சொந்த விருப்பு வெறுப்புகளுக்காக நாட்டையே துண்டாடும் நிலைமையில் செயல்படும் நாட்டுத் தலைவர்கள், மதமும் ஜாதியும் மாற்றத்தைக் கொண்டுவரும் என நினைக்கிற மதவெறியர்கள், இவர்களால்தான் இன்றைக்கு காஷ்மீர் சின்னா பின்னமாகி இருக்கின்றது.

காஷ்மீர் என்றாலே குளிர்பிரதேசம் என்ற நிலை மாறி தகிக்கும் காஷ்மீர் ஆகியிருக்கிறது என்றால் அதில் மிகையில்லை.

**வே.காசிநாதன்**
**வழக்கறிஞர்**



# முன்னேறத்துடிக்கும் இளைஞர்களுக்கு முன்னுதாரணம் “அபிராமி” கீர்த்திவாசன்

"பா"ரதத்தால் பாரதத்தை விடுதலை பெற்ற நாடாக மாற்றியதில் பெரும் பங்கு வகித்தவர் புரட்சி கவிஞர் பாரதியார். அவர் தேசிய விடுதலை மட்டுமல்ல. மற்ற பிற விஷயங் களான பெண் விடுத லை, இளைஞர் களி டையே விழிப் புணர்வு, தெய்வ பக்தி ஆகிய வற்றை ஊட்டினார். பாரதி யாரின் கவிதை களை படிக்கும் எந்த பாமரனுக்கும், அவனுள் ஒரு வேகம் பிறக்கும். அந்தவகையில் முன்னேறத் துடிக்கும் இளைஞர் களுக்கு முன்னுதாரணமாக விளங்கும் எஸ்.வி.ஆர்.வி. கீர்த்தி வாசன் அவர்களின் வாழ்க்கை வரலாறு அமைந்திருக் கிறது. நாகை மாவட் டம் மயிலாடு துறை வட்டம், செம்பனார் கோயில் அருகிலுள்ள முடி கொண்டான் கிராம த்தில் எஸ். வெங்கட்ராம அய்யர்– கமலா ம்பாள் தம்பதியரின் கடைசி மகனாக பிறந்தவர் தான் ராதாகிரு ஷ்ணன் என்கிற, சங்கர் என்கிற, எஸ்.வி.ஆர்.கீர்த்தி வாசன். அக்ரஹாரத்தில் பிறந்ததால் ஆச் சாரங்களுக்கு சற்றும் குறை வில்லாமல் தாய் தந்தையரால் வளர்க்கப் பட்ட பிள்ளை களில் வாச னும் ஒருவர்.



தன்னுடைய இயற் பெயரை மாற்றி தன்னுடைய அண்ணன் பெயரை வைத்துக் கொண்டு பல்வேறு சோதனை களை கடந்து இன்று சாத னை புரிந்த பௌலிங் வீரரா கவும் முன் னணி நிறுவனுமான அபிராமி தியேட்டர் உள்ளிட்ட அபிராமி குழுமத்தின் நிறு வனங்களின் மேலாளராக விளங்குகிறார்.



அவர் அந்த இடத்திற்கு வருவதற்கு ஏகப்பட்ட தடைகளை தாண்டி வந்திருக்கிறார். பொதுவாக ஒரு மனிதனுக்கு பொருளாதாரத் தடை, சமுதாயத்தடை, குடும்பத்தடை என்று பல்வேறு வகைகளில் முன்னேறுவதற்கு முட்டுக்கட்டையாக அமைந்திருக்கும். ஆனால் கீர்த்திவாசன் அவர்களுக்கோ,







பிறந்தது முதல் சாதனையாளராக தன்னை உருவகப் படுத்திக் கொள்ளும் வரை உருவாக்கப்பட்ட தடைகள் மற்றும் உருவான சோதனைகள் ஏராளம். ஏராளம். அவருடைய தந்தை எஸ்.வி.ஆர் என்று கலைத்துறையில் குறிப்பிடப்படும் எஸ். வெங்கட்ராமையர்.

காவல்துறையில் பணியாற்றிய அவர் கலைத்துறையின் மீது கொண்டிருந்த மோகத்தால் அரசு வேலையை துறக்கவேண்டியதாயிற்று. கலைத்துறையில் சாதனை புரிவதென்பது பெரும்பாலும் சூறாவளிக் காற்றில் சுற்றிவரும் அலைகளுக்கு மத்தியில் கடலில் முத்துக்குளிப்பது போன்றது. அத்தகைய பெரும் போட்டி வாய்ந்த துறையில் அவரால் முன்னேறவே முடியவில்லை. ராஜலட்சுமி புரொடக்ஷன் என்ற நிறுவனம் தொடங்கி நிறைய நாடகங்கள் போட்டாலும் ரத்தக்கண்ணீர் நாடகத்தைப் போட்டு அந்த நாடகத்தில் எம். ஆர்.ராதா வேடத்தில் நடித்து அதனால் நடிகர் திலகத்திடம் பாராட்டுப் பெற்றது ஒன்றே, அவர் பெற்ற சாதனை. ஆனால் அந்த சாதனை மட்டுமே அவரது குடும்பத்தை காப்பாற்றவில்லை.

எனவே, இவரது தந்தை புதுடெல்லியில் ஹோட்டல் ஆரம்பித்தார். அந்த ஹோட்டல் தொழிலும் சரிவர நடக்காமல் தள்ளுவண்டியில் இட்லி வடை வியாபாரம் செய்ய ஆரம்பித்தார். இப்படியாக தந்தையின் பொருளாதார சூழல் இவரது வாழ்க்கையை புரட்டிப்போட்டுவிட்டது. சோதனைமேல் சோதனையாக இவரது அண்ணன் மறைவும் பெரும் துயரத்தில் ஆழ்த்தியது. தன்னைவிட தனது சகோதரன் கீர்த்திவாசன் நன்றாக படிப் பார் எனவே குடும்பத்தை காப் பாற்றும் பொறுப்பு அண்ணனின் கைகளில் சேரும் எண்ணியிருந்த வேளையில் அந்த கனவை தவிடுபொடியா க்கியது அவரின் மறைவு. ஒரு கட்டத்தில் இவரது தந்தை யும் மறைய, மொத்த குடும்பப் பொறுப்பும் விமல் மீது விழுந்தது. ஒட்டுமொத்த குடும்பப் பொறுப்பையும் சுமக்கவேண்டிய சூழலில் இருந்த விமல் தனது அண்ணன் மீது உள்ள பாசத் தினால் தன்னு டைய பெயரை எஸ்.வி.ஆர்.வி. கே.வாசன் என்று மாற்றிக் கொண்டார்.

ஆரம்பத்தில் ரேஷன் கடைகளிலும், பின்னர் எஸ்.டி.டி.பூத்திலும் பணியாற்றி படிப்படியாக முன்னேறிய விமல் என்கிற கீர்த்திவாசன் அவ்வளவாக படிப்பில் முன்னேற்றம் கொண்டவர் இல்லை.

என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் தான் கொண்ட லட்சியத்தில் உறுதியாக இருந்த கீர்த்திவாசன் தன்னை உலகமே பாராட்டவேண்டும் என்று எண்ணி இன்று இந்தியாவில் தலைசிறந்த பௌலிங் சேம்பியனாக வலம் வருகிறார். There is a Women behind successfull of every man என்ற பொன்மொழிக்கு ஏற்ப இவரது வாழ்வில் வசந்தமாக வந்தவர் தான் இவரது துணைவியார் வித்யா அவரது கரம் பிடித்தப்பின் தான் புகழின் சிகரத்திற்கே வந்ததாக தன் மனைவியை பற்றி பெருமையாக கூறிக்கொள்கிறார் கீர்த்திவாசன். சென்னை லீமெரிடியன் ஹோட்டலில் வேலைக்கு சேர்ந்து அதன் நிறுவனத்தலைவர் பழனி ஜி.பெரியசாமி அவர்களின் மனதில் இடம் பிடித்தார். தனது கடுமையான உழைப்பால் அந்த ஹோட்டலுக்கு மிகப்பெரிய பெயரை உருவாக்கித் தந்தார். அதற்காக விருதும் பெற்றார்.

எல்லா மனிதர் வாழ்க்கையிலும் தொடரும் குடும்ப சூழல் இவரை பெரிதும் பாதித்தது என்றாலும்கூட தான் கொண்ட உறுதியில் நிறைவேற்றவேண்டிய சாதனைகளில் அனைத்தும் முடித்து, வெற்றிப் பயணத்தை அபிராமி ராமநாதனோடு தொடர்கிறார். தன்னுடைய வாழ்க்கையின் உயர் லட்சியங் களுக்கும் மற்றும் மிகப்பெரிய முன்னேற்றத்திற்கும் அபிராமி இராமநாதன் அவர்கள் பெரிதும் துணை புரிந்தார் என்றும். அவரே தமக்கு மிகப்பெரிய வழிகாட்டி என்றும் குறிப்பிடுகிறார் கீர்த்திவாசன். இவரது வாழக்கை முன்னேற வேண்டும் என்று துடிக்கும் இளைஞர்களுக்கு அவர் தனக்கு ஏற்பட்ட சோதனைகளை முறியடித்து சாதனைகளை படைத்ததை எண்ணிப்பார்த்திடல் வேண்டும். அதற்கு பாரதியின் மனதில் உறுதி வேண்டும் என்ற பாடலையும் சேர்த்துப் படித்திட வேண்டும்.

மனவூர் கி.விடரான்யன்



## கபாலிகான் நியூஸ்

# கூட்டுறவு சங்க தேர்தலில் தி.மு.க அ.தி.மு.க கூட்டணி-

கருப்பு பேட்ஜ் அணிந்து கொண்டு உள்ளே வந்தார் கபாலிகான்.

**‘என்னா கருப்பு பேட்ஜ்?**

காவேரி மேலாண்மை வாரியம் அமைக்காத மத்திய அரசை கண்டித்து எல்லோரும் எதிர்ப்பை காட்டுவதை போல நானும் எதிர்ப்பு தெரிவிக்கிறேன்.

**காவேரி மேலாண்மை வாரியம் அமையுமா? அமையாதா?**

பொதுவாக தமிழகத்தின் எல்லா உரிமைகளும் பறிபோகின்றன. அதைப் போலத் தான் விவசா&யிகளின் வாழ்வாதார உரிமையான காவேரியின் உரிமையும் பறிபோனது தான். முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் உண்ணாவிரதம் இருந்தாலும் எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் முழு அடைப்பு போராட்டம் நடத்தியும் பலனில்லை. இதற்கு காரணம் சரியான தலைமை தமிழகத்தில் இல்லாததுதான்.

**‘ஏன் அ.தி.மு.க. ஆட்சிதானே நடக்கிறது?**

ஆட்சி அ.தி,மு,க தான். ஆனா அதிகாரம் டெல்லி கையில... மாப்பிள்ளை இவருதான். ஆனா இவர்போட்டு இருக்கிற சட்டை என்னுடையது இல்லைங்கறமாதிரிதான்.

**ஏன் மெஜாரிட்டி ஆட்சிதானே?**

Eps- Ops இரண்டு பேரும் சேர்ந்ததால மெஜாரிட்டி ஆட்சிமாதிரி தோனும். ஆனா இந்த விஷயத்துல மைத்ரேயன் சொன்னது தான்.

என்ன சொன்னாரு மைத்ரேயன்?

அணிகள் இணைஞ்சாலும் மனங்கள் இணையவில்லை என்று அவர் சொன்னது சரியாபோச்சு.

**எப்படி சொல்றீங்க?**

எல்லா ஊர்லேயும் இன்னமும் Eps- Ops அணின்னு தான் பிரிஞ்சி வேலை செய்றாங்க.

Ops மேல அவரது ஆதரவாளர்கள் அதிருப்தியா இருக்காங்களாமே.

**ஆரம்பத்தில் Ops அம்மா சமாதி முன்பு தியானம் செய்தபோது உடன் இருந்தவர்கள் இப்போது அவருடன் இல்லை உதாரணம் பழனிச்சாமி. எடப்பாடியா?**

இல்ல இல்ல கே.சி.பழனிச்சாமின்னு முன்னாள் எம்.பி. இவர்தான் சசிகலா பொதுச் செயலாளர் ஆனதை எதிர்த்து முதலில் வழக்கு தொடுத்தவர். இவர் இப்போது கட்சியை விட்டு நீக்கப்பட்டு விட்டார்.

**அவர் போனா என்ன ?**

அவரைப் போலவே எல்லோரும் ஒ.பி.எஸ். மேல கோவமா இருக்காங்க. என்ன கோவம்.

இணைப்புக்கு முன்னாடி எல்லோரும் தங்களுக்கு பதவி கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால், ஒ.பி.எஸ். துணை முதல்வராகவும், மா.ப.பாண்டியராஜன் மந்திரியாகவும் பதவி ஏற்றார்கள். ஏமாற்றம் அடைந்தவர்கள் கட்சிப் பதவியாவது கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்கள் அதுவும் கிடைக்காததால் எண்பது சதவிதம் பேர் தினகரன் அணிக்கு தாவ முடிவுபண்ணிடாங்க.

**எப்படி சொல்றீங்க ?**

சமீபத்தில் நடந்து முடிந்த கூட்டுறவு சங்கத் தேர்தலில் அ.தி.மு.க. வுக்கு இணையாக அ.ம.மு.க. வினர் அதிக அளவில் வேட்பாளர்களை நிறுத்தினார்களாம். ஆளுங்கட்சிக்கு தி.மு.க. வை சமாளிப்பதை விட தினகரன் கட்சியினரை சமாளிப்பது பெரும் பாடாகிவிட்டதாம்.

**தி.மு.க. வை எப்படி சமாளிச்சாங்க?**

அவங்ககூட அட்ஜஸ்ட் பண்ணச் சொல்லி மேலிடமே உத்தரவு போட்டதாம்.

எப்படி கூட்டுறவு சங்க பதவிகளில் சிலவற்றை தி.மு.க. விற்கு பங்கு கொடுக்கவும் ஏற்காத தி.மு.க வினரின் பாரங்களை கிழித்து போடவும் மேலிடம் உத்தரவிட்டதாம்

அப்ப கூட்டுறவு சங்க தேர்தலில் தி.மு.க அ.தி.மு.க கூட்டணின்னு சொல்லலாம் ஆனாலும் அதிலும் ஒரு சிக்கல்.

**என்ன சிக்கல்?**

அ.தி.மு.க. கட்சியினரிடையே பதவிகளை பங்கிடுவதில் ஒ.பி.எஸ்.~ இ.பி.எஸ். அணிகளுக்கு இடையே தகராறு நடந்ததாம்.

**இ.பி.எஸ். எப்படி சமாளிக்கிறார்?**

எல்லாம் வைட்டமின் ‘ப’ வைத்துதான் என்று சிரித்தபடியே வெளியேறினார் கபாலிகான்.



# நடந்தால் நாடெல்லாம் உறவே

உழைப்பும், விடாமுயற்சியும் உள்ளவர்களுக்கு எப்போதும் வசந்தகாலமே.. இரண்டும் இல்லாதர்களுக்கு என்றும் இருண்ட காலமே! பல நிகழ்வுகளைக்கூர்ந்து நோக்கினால் ஓர் உண்மை புரியும். ஒவ்வொரு தடையுமே ஒவ்வொரு வெற்றியை மறைந்து வைத்திருக்கிறது.


ஒரு கதவு அடைக்கப்பட்டால் இன்னொரு கதவு திறக்கும் என்கிற தன்னுணர்வு அனைவரது நெஞ்சிலும் தழைக்க வேண்டும். உலகம் முழுவதும் பெரிதாகப் பேசப்படும் பெட்ரண்ட்ரஸ்ஸல், அமெரிக்க நாட்டு அறிஞர் இங்கர்சால் போன்றவர்கள் பல நிலைகளில் தோல்விகளைச் சந்தித்தவர்கள். எதிர்நீச்சல் போட்டு போராடி உலகம் பதிக்கும் உயர்ந்த இடத்தைப் பெற்றவர்கள் ஆவர். தங்கள் மீது நம்பிக்கை இல்லாதவர்களுக்குத் தலைக்கு மேல் கவலை! தாங்க முடியாத துயரத்தில் சிக்கித் தவிக்கின்றனர். நமக்கு நண்பனும் நாமே! நமக்குப் பகைவனும் நாமே!

தமது பலவீனங்களைத் தகர்த்தெறிந்து வெல்பவன் தனக்குத்தானே நண்பன். தமது பலவீனங்களை வெல்ல முடியாமல் தவிப்பவன் தனக்குத்தானே எதிரியாகத் தடுமாறுகிறான்.

எவருக்கும் கவலை என்பது இல்லாமல் இருப்பதில்லை. அண்மையில் அமெரிக்காவில் இது குறித்து ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. எந்த அடிப்படை காரணமும் இல்லாமல் நாற்பது சதவீதக் கவலைகளும், கடந்த காலம் பற்றி முப்பது சதவீதக் கவலைகளும், பிறரைப் பற்றி பன்னிரெண்டு சதவீதக்கவலைகளும், நோய் நொடிகள் பற்றிப் பத்து சதுவீதக் கவலைகளும் வருவதாகக் கூறுகின்ற அவ்வாய்வு உண்மையான கவலைகள் எட்டு சதவீதம் மட்டுமே எனக் குறிப்பிடுவது ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது.

எப்போதும் மனத்தை தூய்மையாக வைத்துக் கொள்வதே நலம். வீண் அச்சங்கள் நம்மை ஒரு போதும் நெருங்க அனுமதிக்கக் கூடாது. ஆத்திரம் அடைந்து தாக்குவதற்கும், எதிர்பதற்கும் ஒரு பலம் தேவை. எனினும் அமைதியாக இருப்பதறகும், தாக்காமல் இருப்பதற்கும் மற்றொரு பலம் தேவை. அதுவே நமக்குத் தேவையானது; நம்மை வாழ்வில் உயர்த்துவது என்பதை மறந்து விடக்கூடாது.

பட்டகாலிலே படும்! கெட்ட குடியே கெடும் என்பர். அடுக்கடுக்கான தோல்விகள் அணிவகுத்து வரலாம்; ஆர்பரித்தும் வரலாம்; அதற்காக மனம் சோர்ந்து விடக்கூடாது. உலகமே இருண்டு விட்டதாக ஓய்ந்து விடக்கூடாது. பல நிலைகளில் வாழ்க்கையில் பலர் ஸ்வெற்றி பெறுகிறார்கள். மேலோட்டமாகப் பார்த்தால் அவர்களின் வெற்றிக்கு உண்மையான காரணங்களை நம்மால் உணர்ந்து விட முடியாது. அவர்கள் பெற்ற வெற்றிகளுக்குப் பின்னால் ஆயிரம் தோல்விகள் வழி மறித்திருக்கும். அவற்றைத் தாண்டியே அவர்கள் வெற்றி முகட்டை எட்டிப் பிடித்திருக்கிறார்கள் என்பது தெரியும்.



வாழ்க்கையை நாம் நேசிப்பது உண்மையானால் நாம் நேரத்தை வீணாக்கக் கூடாது. ஏனெனில், வாழ்க்கை நேரத்தால் ஆனது என்பர்; நம்முடைய செயல்கள் ஒவ்வொன்றுமே நாம் யாரென்பதைப் பிறருக்கு, உள்ளங்களை நெல்லிக்கனி போல உணர்த்தும் என்பதை மறந்து விடக் கூடாது. மனநிறைவைப் போன்ற நலம், ஒழுக்கத்தைப் போன்ற அணிகலன், உடல்நலத்தைப் போன்ற பேறு இவ்வுலகில் வேறு எதுவும் இருக்க முடியாது என்பதைச் சரிவர உணர்ந்து கொள்ளாததால் சறுக்கலும், வழுக்கலும், பல நேரங்களில் நம்மைச் சந்திக்கத் தூது விடுகின்றன. சில நேரங்களில் சந்தி சிரிக்கவும் வைத்து விடுகின்றன.

உள்ளத்தில் எவ்வளுக்கு எவ்வளவு அமைதி நிலவுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு இன்பம் உண்டாகிறது. அமைதி குறையக் குறையத் துன்பம் வளர்கிறது. நடந்தால் நாடெல்லாம் உறவு. படுத்தால் பாய் கூடப் பகையாகும் என்று மேனாட்டறிஞர் ஒருவர் குறிப்பிடுகின்றார். நன்றாகப் பேசுவது நல்லதுதான். ஆனால் நன்றாக செய்வது அதனினும் நல்லது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

பழங்கள் நிறைந்த மரம் எப்பொழுதும் சுமையினால் தாழ்ந்து வளையும். அதுபோலப் பெருமைபெற விரும்பினால் அடக்கத்தோடும் பணிவோடும் இருத்தல் வேண்டும்.



# ஆன்மீகவாதியின் அருட்பணிகள்!



சிவபாஸ்கர் கவிஞர் மட்டுமல்ல; நல்லாசிரியர் என்பதோடு ஒரு சிறந்த ஆன்மீகவாதி. அவரது வாழ்க்கை மற்றவர்களுக்கு ஒரு பாடமாக இருக்கும் என்பதால் அவரது வாழ்க்கைக் குறிப்புகளை உங்களுக்காகத் தருகின்றேன்.

சென்னை, பெரியார் நகரைச் சேர்ந்தவர் சிவபாஸ்கர். சிறு வயதில் இருந்தே இறை பக்தியுடன் வளர்ந்தவர். இவரது தாய், தந்தை இருவருமே குடும்பத்தைத் தெய்வீகமாக நடத்தியவர்கள். மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர். சிறு விவசாயியான இவரது தந்தையின் சொற்ப வருமானத்திலேயே குடும்பம் நடைபெற்று வந்தது.

இருப்பினும் இறைவனின் அருளால் அன்பும், அமைதியும் நிறைந்த குடும்பமாகவே தழைத்து வந்தது. இறைவனின் அருளாற்றல்களைத் தந்தையிடமிருந்து தினமும் கேட்டறிந்தார். இதனால் இவருக்குக் கடவுள் நம்பிக்கை அதிகமானதில் வியப்பில்லையே?

சாப்பாட்டிற்கே கஷ்டமான நிலையில், இறையருளால் வாழ்வில் பல்வேறு ஏற்றம் பெற்றார். பொதுமேடைகளில் சிறு சிறு உரை நிகழ்த்தியதுதான் ஆரம்பம். அதன்பிறகு இறையருளால் கடவுளைப் பற்றிய சிறு கைப் பிரதிகள் வெளியிட்டு இறைப்பணியைத் தொடர்ந்தார். இவரது தாயின் மரணம் இவரை ரொம்பவே பாதித்தது எனலாம். அதன்பிறகு குடும்பச் சுமை காரணமாகப் படிப்பைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டது.

மிகவும் சிரமப்பட்டு கூலி வேலை செய்து கொண்டே படிப்பைத் தொடர்ந்துள்ளார். ஓவிய ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கிய இவர் அஞ்சல் வழி கற்று முதுகலைப் பட்டமும் பெற்றார். இதனிடையிலும் அதிக நேரம் இறைப்பணியாற்றுவதே தனது கடமை என்று உணர்ந்து அதன்படி செயல்படவும் ஆரம்பித்தார்.

அருள்மிகு சிவன் இவரது கனவில் தோன்றி இவரது வாழ்க்கைக்கு வழிகாட்டி வருகின்றார். அதன்படியே இவரது வாழ்க்கை அமைந்து வருகின்றது. அனைத்து நேரங்களும் சிவனது அருள்மொழிகள் இவரது காதில் ஒலித்துக் கொண்டிருப்பது இவரது தனிச்சிறப்பாகும்.

ஒருநாள் தன்னைப் பற்றிப் பாட வேண்டும் என்று சிவபெருமான் கனவில் கூற அதற்கான ஏற்பாடுகளை விரைவாகச் செய்ய ஆரம்பித்தார்.

சிவனருளால் தமிழகத்தில் உள்ள பல சிவாலயங்களுக்கும் சென்று சிவ தரிசனம் செய்து வந்து விட்டார். இவரது துணைவியாரும் ஆன்மீகத்தில் இவருக்கு கொஞ்சமும் சளைத்தவர் அல்ல. அவரும் இவருடன் சேர்ந்தே அருட்பணிகளைத் தொடர்ந்து வருகின்றார். இறைவன் தன்னோடு உரையாடும் நிகழ்வுகளால் தான் இன்ப மழையில் நனைவதாகப் பெருமைப் படுகின்றார். சுவாமியின் திருக்கோயில்களில் திருமால்பூர், திருப்பாசூர், திருவிற்கோலம் எனப்படும் கூவம், திருவாலங்காடு எனத் தான் தரிசித்த சுவாமிகளின் பாடல்களை வெளியிட ஏற்பாடு செய்தார்.

அதில் திருமால்பூர் அருள்மிகு சிவன் குறித்து இரண்டு பாடல்களை எழுதி இசையமைத்துப் பாடியது எல்லாம் கடவுள் செயலே! "சங்கீதமே தெரியாத தனக்கு சங்கீத ஞானம் கொடுத்துப் பாடச் செய்தது சாட்சாத் இறைவனே" எனப் பலரிடமும் கூறி வருகின்றார். அந்தப் பாடல்கள் அனைத்தும் தற்போது குறுந்தகடுகளாக வெளியாகி எல்லா சிவாலயங்களிலும் ஒலித்துக் கொண்டு இருக்கின்றது.

'தேவி தரிசனம்' என்னும் பத்திரிகையில் திருமால்பூர் இறைவன் குறித்த வரலாறுகளை எழுதியுள்ளார். அருள்மிகு சுவாமியின் கட்டளையால், அவரது திருவிளையாடல்களைத் தொடர்ந்து எழுதும் பணியிலும் ஈடுபட்டுள்ளார்.

15 ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணியாற்றிய சிவபாஸ்கர் தற்போது தலைமை ஆசிரியராகப் பணியாற்றி வருவது குறிப்பிடத் தக்கது.

தனது பணி இறுதி மூச்சு வரை அருள்மிகு சிவபெருமானின் புகழ் பாடுவதே எனக் குறிப்பிடும் ஆன்மீகவாதி சிவபாஸ்கரின் அருட்பணிகள் தொடர்ந்திட வாழ்த்துவோமே?

**சி.கோ.ரகுபதி ஆத்மா.**

# பாரதி கண்ட புதுமைப்பெண்




**பாரதி கண்ட புதுமைப்பெண்**
**லட்சியம் கல்வித் தொண்டு நிறுவனத்தலைவர்**
**டாக்டர் எம்.ரஜினி**

**ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்**
**றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்;**
**வீட்டுக் குள்ளேபெண்ணைப் பூட்டிவைப்**
**போமென்ற**
**விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்.**
**பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்**
**பாரினில் பெண்கள் நடத்தவந்தோம்;**
**எட்டு மறிவினில் ஆணுக் கிங்கேபெண்**
**இளைப்பில்லை காணென்று கும்மியடி**
**என்றார் பாரதி.**

அவரது கவிதைகள் பெண்கள் படிப்பறிவு இல்லாததைச் சுட்டிக்காட்டியும் பெண் கல்வியின் ஆவசியத்தையும் வலியுறுத்துகின்றன. அப்படி பாரதியாரின் கவிதைக்கேற்ப படித்த ஒரு பெண்மணி தான் **Ln.**.டாக்டர்.ரஜினி. இவர் **M.A., B.Ed., MCS, M.Phil, PGDCA, BHP, Ph.D ., D.Lt., D.Hum, Honorary Causa (USA)** படித்திருக்கிறார்.

தான் படித்தால் மட்டும் போதாது. பெண் குழந்தைகளும் படிக்கவேண்டும் என்பதற்காக நிறைய புத்தகங்கள் எழுதியும், அவர்களை ஊக்குவித்தும் வருகிறார். ஒருபெண் தன்னுடைய சுயசம்பாத்தியத்தின் மூலம் சொந்தக்காலில் நின்று, வாழ வேண்டும் என்பதை வலியுறுத்தும் விதமாக **Lakshyam Educare & Events Pvt Ltd** என்ற நிறுவனத்தை தொடங்கி கல்வி சேவை புரிந்து வருகிறார். இதற்காக அவர் 1986 ஜவஹர்லால் பவன் தேசிய சுற்றுச் சூழல் விருதினை கல்வித்துறை அமைச்சர் சி.பொன்னையன் அவர்களிடமிருந்து பெற்றுள்ளார்.

1994 மற்றும் 2014ல் சிறந்த சமூக சேவைக்கான விருதினை பெற்றுள்ளார்.

2013 விண்வெளி தீர்வு வடிவமைப்பு விருதினை டாக்டர் ருத் க்ளோபஸ் அவர்களிடமிருந்து பெற்றுள்ளார்.

2013 மனிதவள மேம்பாட்டு அறக்கட்டளை விருதினை விவேகானந்தா சாரிட்டபிள் டிரஸ்ட் இவருக்கு வழங்கியது.

2014 மனிதவள மேம்பாட்டிற்கான டாக்டர் பட்டத்தை அமெரிக்காவை சேர்ந்த **ACI** பல்கலைக்கழகத்திடமிருந்து பெற்றுள்ளார்.

2015 கல்விக்கான பன்னாட்டு சாதனை யாளருக்கான விருதினையும் பாண்டிச்சேரி முதல்வரிடம் பெற்றுள்ளார். 2015 சாதனைப் பெண்மணிக்கான விருதினை மகளிர் தினத்தன்று பெற்றுள்ளார். 2014 ராமானுஜரின் மனிதநேய விருதினைப் பெற்றுள்ளார். 2015 சிறந்த சமூக மற்றும் பொது சேவைக்கான சமத்துவ செல்வர் விருதினையும் பெற்றுள்ளார். தேசிய மனித உரிமைக் கழகம் சிறந்த பெண்மணிக்கான விருதினை வழங்கியுள்ளது. அகில பாரதிய ஆன்மீக அண்ணா தன சங்கம் மற்றும் உலக நட்புறவு மையம் வழங்கிய சேவா ரத்னா விருதையும் பெற்றுள்ளார். கல்வித் துறையில் உலகளாவிய சாதனையாளர்க்கான விருது தாய்லாந்து நிதியமைச்சர் மற்றும் தாய்லாந்தின் அமெரிக்க தூதரக அமைச்சர் முன்னிலையில் துணை பிரதமர் அவர்களால் வழங்கப்பட்டது.



இத்தனை படிப்பும் விருதுகளும் பெற்ற இந்த பெண்மணி தான் கடந்து வந்த பாதையை மித்ரா டைம்ஸ் மாத இதழ் வாசகர்களிடம் பகிர்ந்துக் கொள்கிறார். நான் பிறந்து வளர்ந்ததெல்லாம் சென்னை தான். படிச்சதெல்லாம் கூட சென்னை தான். ஒரு சாதாரண அரசு பள்ளிக்கூடத்துலதான் படிப்பைத் தொடங்கினேன். அதனுடைய அடித்தளம் தான். இன்னைக்கு நான் உங்க முன்ன நின்னு பேசவும் நிறைய அவார்ட்ஸ் வாங்கவும் காரணமாக இருந்திருக்கு.

நான் இரண்டாவது படிக்கும் போதிலிருந்தே ஏழு வருடம் பரதநாட்டியம் கத்துக்கிட்டேன். கர்நாடிக் மியூசிக் ஐந்து வருடம். ஆறாம் வகுப்பிலிருந்து இந்தி கத்துக்கிட்டேன்.

1992ல் விக்காஸ் அவார்னஸ் மூவ்மென்ட் தொண்டு நிறுவனம் தொடங்கினோம். சென்னையில் மூன்று இடங்களில் பள்ளிக்கூடம் நடத்திட்டு இருந் தோம். காலையில் பள்ளி வேலையை பார்ப்போம். மாலையில் நைட் ஸ்கூல், அடல்ட் எஜூகேஷன், ஸ்லம் அடாப்டேஷன், அப்பன்னு நூற்றுக்கணக்கான குழந்தைகளுக்கு பத்து வருடத்தில் நிறைய சேவை செய்திருக்கிறோம். இந்தி, ஆங்கிலம், கணக்கு என குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுத்துப் படிக்க வைத்திருக்கிறோம்.





அங்கு ஒரு தனியார் பள்ளியில் தலைமையாசிரியரா என் பணியை தொடங்கினேன். சேலஞ்சுனா எனக்கு ரொம்ப பிடிக்கும். 2001 ஆம் ஆண்டு 300 பசங்களுடன் ஆரம்பித்த அந்த பள்ளிக் கூடத்தில் 2003ம் ஆண்டு மொத்த மாணவர்கள் எண்ணிக்கை 1000 ஆக உயர்த்தினேன்.

அதன்பிறகு, அரசு பள்ளிக்கூடத்துல வேலைப் பார்த்தேன். புத்தகத்தையே படிக்கிறது. இரவு 11 மணிவரை படிக்கிறது என அந்தப் பள்ளிக்கூடத்தில் கரிக்குலத்தையே மாத்தினேன். நிறைய அவார்னஸ் நிகழ்ச்சி நடத்தினேன். சிறுவர் சீர்திருத்தப் பள்ளிக்கூடங்களுக்கு மாணவர்களை அழைத்துப் போய் அவர்களுடன் பேச வைப்பேன். இப்படி 140 பள்ளிக்கூட பசங்களை உருவாக்கியிருக்கிறேன். என்னிடம் ஆறாம் வகுப்பு, ஏழாம் வகுப்பு படிக்கிற மாணவர்களுக்கே பயிற்சி கொடுத்திருக்கிறேன்.

படிச்சிதிருந்தாலும் கூட நிறைய பெண்கள் மீண்டும் அடுப்படிக்கே போய்விடுகிற நிலைமை இருக்கிறது. முழுக்க முழுக்கப் பெண்களுக்கு விழிப்புணர்வு கொடுக்கணும் அதுதான் என் கருத்து.

என்னுடைய வாழ்க்கையில் அடிப்பட்டு வீழுந்ததுக்கு அப்புறம், படிக்கணும், டீச்சராகணும் தலைமை யாசிரியராகணும், பள்ளிக்கூடம் ஆரம்பிக்கணும் என ஒவ்வொன்றுமே இலட்சியத்தோட போராடி ஜெயிச்சதுதான். அதனால்தான் நிறுவனத்துக்கு பெயர்கூட லட்சியம்னு வச்சேன். இந்த பெயர் வேறெங்குமே கிடையாது. இன்னைக்கு குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுக்கிற பாடல்களில் பல தவறான கருத்து உள்ளவைதான். அதனால் இதையெல்லாம் மாத்தணும் என்று 300 பாடல்கள் எழுதியிருக்கிறேன். அதற்கான கின்னஸ் விருது மிக விரைவில் வரப்போகுது. உதாரணமாக,

"Rain Rain Go Away என்றுஎழுதியிருக்கிறார்கள். மழையை "வா...வா"என்றுதான் கூப்பிட்டு பழகுவோம். அதை "போ...போ" என்றால் நாமெல்லாம் எப்படி வாழ்வது? இன்னும் நிறைய இருக்கு. அது எந்த இடத்தில் எந்த சூழ்நிலையில் சொல்லப்பட்டதென்பது வித்தியாசமான கருத்து. அதைப்போய் குழந்தைகளிடம் சொல்லித்தர வேண்டிய அவசியமில்லை. குழந்தைகளுக்கு தன்னம்பிக்கைத் தரக்கூடிய வகையில் கல்வி முறை இருக்கணும். இதுபோல 30 பாடல்கள் என பாடப் புத்தகத்தில் வெளிவந்துள்ளது. பாண்டிச்சேரி முதலமைச்சர் இதை கௌரவப்படுத்தி விருது கொடுத்தார்.

Londan Bridge Falling Down அப்படின்னு
பாடல் இருக்கு. லண்டன்ல எப்பவும் பாலம்
இடிந்து விழுந்ததை ஏன் குழந்தைகளிடம் சொல்ல
வேண்டும். இன்றைக்கு மீடியா பார்த்து
குழந்தைகள் நமக்குச் சொல்றாங்க. அதனால் நாம
தெளிவாக நல்ல செய்தியை குழந்தைகளுக்கு
கொடுக்க வேண்டிய கடமை நமக்கு உள்ளது.
தவறை திருத்தித்தான் நான் இப்படி
ஆரம்பித்தேன்.

You can make a london Bridege
I can make a london Bridege
We all can make a london bride,
if we are Engineeers

என்ஜினியரியங் படிச்சா பாலம் கட்டலாம்னு தெரியும். சிமெண்ட் வேணும்னும் தெரியும். தெரியற செய்தியை கூட சொல்லித் தரணும். எந்த வேலை செஞ்சாலும் அதுல மனதிருப்தியோட செய்யணும்னு நான் விரும்புவேன். எது எப்படியோ, கண்டிப்பாக படிப்பு அவசியம். படிக்காதவர்களும் எவ்வளவு சாதிச்சிருக்காங்க. அவங்க படிச்சா இன்னும் எவ்வளவோ பண்ணலாம். என்னை சுற்றி எல்லாம் கைவிட்டுப்போன பின்னும், என் கூடவே, இருந்து இந்த உயரத்துக்கு கொண்டு வந்தது என் படிப்புதான். படிப்பு மட்டும்தான். யாராலயும் தடுக்க முடியாது. திருட முடியாது. அழிக்க முடியாது. மறுக்க முடியாது. அதனால தான் திரும்பத் திரும்பச் சொல்றேன். படிப்புதான் நம்மை அறிவுப்படுத்தும், தெளிவுபடுத்தும், வளமையாக்கும், வழிகாட்டும் மேலே உயர்த்திடும்.

முதன்மை செய்தியாளர் K.V. **ஈஸ்வரி**

# “பாய்” தொழிலை சுருட்டிப் போட்ட ஜி.எஸ்.டி

ஜி.எஸ்.டி. யால் பாய் தொழில் முடங்கியது: 700 குடும்பங்கள் பாதிப்பு_

கொள்ளிடம்: கொள்ளிடம் அருகே குடிசை தொழில் போன்று நடைபெற்று வரும் பாய் தயாரிப்பு தொழில் ஜி.எஸ்.டி வரியால் முடங்கிப்போய் உள்ளது. இதனால் 700 குடும்பங்கள் பாதிக்கப்



பட்டுள்ளன. நாகை மாவட்டம் கொள்ளிடம் அருகே சேந்தங்குடி, தைக்கால், ஆயங்குடிப்பள்ளம் ஆகிய பகுதிகளில் சுமார் 60 ஆண்டுகளுக்கு மேலாக பாய் தயாரிப்பு தொழில் நடைபெற்று வருகிறது. குடிசை தொழில் போன்று இப்பகுதியில் அனைத்து வீடுகளிலும் பாய் தயாரிப்பு தொழில் நடைபெற்று வருகிறது. நேரடியாகவும், மறை முகமாகவும் பாய் தயாரிப்பு தொழிலில் சுமார் 700க்கும் மேற்பட்ட குடும்பத்தினர்கள் ஈடுபட்டுள்ளனர். செம்பனார்கோயில், கடலி, ஆக்கூர், கீழமாத்தூர், ஓலையாம்புத்தூர், மேலமாத்தூர், சேந்தங்குடி, தைக்கால் உள்ளிட்ட பகுதிகளில் சாகுபடி செய்யப்படும் கோரைப் புற்களை விவசாயிகளிடமிருந்து பாய் தயாரிப்பு வியாபாரிகள் பெறுகின்றனர். 1 கட்டு (4பிடி கொண்டது) ரூ.1350க்கு மேல் கொடுத்து வாங்கப்படும் கோரைகளை சுத்தம் செய்வதற்கு சுமார் ரூ.300 செலவு செய்கின்றனர்.

சுத்தம் செய்யப்பட்ட கோரை புற்களை சமமாக வெட்டி அதன்பிறகு அவற்றை கொதிகலனில் வைத்து பல வித வண்ணங்களில் சாயம் ஏற்றி சுடேற்றும் பணிகள் செய்கின்றனர். சாயமேற்றப்பட்ட கோரைபுற்கள் ஒரு நாள் முழுவதும் சாலையில் நன்கு காய வைக்கப்படுகின்றன. அதன் பின்னர் இயந்திரம் மூலம் வண்ணம் ஏற்றப்பட்டு காய்ந்த கோரைகள் பாய்களாக பின்னப் படுகின்றன. அதனைத் தொடர்ந்து தையல் இயந்திரம் கொண்டு தயார் செய்யப் பட்ட பாய்களின் விளிம்புகளில் பட்டைகள் வைத்து தைக்கப்பட்டு பின்னர் விற்பனைக்கு அனுப்பப் படுகிறது.

இவ்வாறு ஒரு பாய் உருவாக பல தொழிலாளர்களின் உழைப்பு தேவைப்படுகிறது. முழுமை யாக தயார் செய்யப்பட்ட ஒரு கோரைப்பாய் ரூ.70 முதல் அதிகபட்சமாக ரூ.300 வரை விற்பனை செய்யப்படுகின்றன. மேலும் ஆர்டருக்கு ஏற்ப கல்யாண பாயின் மேல் பகுதியில் மண மகன் மற்றும் மண மகள் பெயர்கள் அச்சிட்டு தரப்படுகின்றன. இவ்வாறு சீர்காழி சிதம்பரம் நெடுஞ் சாலையில் உள்ள சேந்தங்குடி, தைக்கால், சாமியம், ஆயங் குடிப்பள்ளம், துளசேந்திரப்புரம் ஆகிய பகுதிகளில் சாலையோரம் பாய்கடைகள் அதிகளவு உள்ளன. இங்கு தயார் செய்யப்டும் பாய்கள் வெளி மாவட்டங்கள் வெளி நாடுகளுக்கும் விற்பனைக்கு செல்கின்றன.

இப்படி சிறப்பாக நடைபெற்று வந்த பாய் தயார் செய்யும் தொழில் ஜி.எஸ்.டி. க்கு முன்பு சிறப்பாகவும் லாபகரமாகவும் நடைபெற்று வந்தது. ஆனால் ஜிஎஸ்டி நடைமுறைப்படுத்த தொடங்கிய பின் பாய் தொழிலும் வரிவிதிப்பு வரம்பிற்குள் வந்ததால் பாய் தொழில் படுத்துவிட்டது என இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவிக்கின்றனர். பாய் தயாரிக்க தேவையான நாடா, சாயம், நூல் ஆகிய அனைத்திற்கும் ஜிஎஸ்டி விதிக்கப்பட்டுள்ளது. ஜிஎஸ்டி விதிப்புக்கு முன்னர் ஒரு பாய் விற்பனை செய்தால் ரூ.5 முதல் ரூ.10 வரை லாபம் கிடைத்தது. தற்போது அதிக அளவு பாய் தயாரிக்க கொள்முதல் செலவு செய்து விற்பனை செய்ய முற்படும் போது அசலில் ரூ.5 விரயம் ஆகும் நிலை உள்ளது. பாய் வாங்க வரும் பொதுமக்களிடம் ஜி.எஸ்.டி.க்காக வரியை விலையுடன் வைத்து கேட்டால், ரசீது இல்லாமல் பாய் தாருங்கள் என கூறுவதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். இதனால் பாய் தயாரிப்பு தொழில் முடங்கி போய் நலிவடைந்து விட்டது. இதனால் சுமார் 700 குடும்பங்களின் வாழ்வாதராம் பாதிக்கப்பட்டுள்ளது.



# வினா வங்கி:

## பொது அறிவுக் குவியல்:

1. பல ஊர் சேர்ந்த பகுதியின் பண்டைய தமிழ்ப்பெயர் என்ன?
2. ‘செல்வச் சுரண்டல்’ கோட்பாட்டை தந்தவர் யார்?
3. ஹைட்ரஜனைக் கண்டுபிடித்தவர் யார்?
4. மிக குளிர்விக்கப்பட்ட திரவம் எனப்படுவது எது?
5. பச்சயமுள்ள சுயஜீவிகளுக்கு எடுத்துக்காட்டு எது?
6. ‘மெட்ராஸ்’ நகரம் யாரால் உருவாக்கப்பட்டது?
7. ஏலக்காயின் அறிவியல் பெயர்?
8. தூத்துக்குடியில் சுதேசி ஸ்டிம் நேவிகேஷன் கம்பெனியைத் தோற்றுவித்தவர் யார்?
9. வெப்பத்தால் விரிவடையாத உலோகக் கலவை எது?
10. உலகிலேயே மிகப்பெரிய ஆற்றுத் தீவான மஜுலி எங்கு உள்ளது?
11. ‘பாங்ரா’ எந்த மாநிலத்துக்குரிய நடனம்?
12. இந்தியாவின் முதன்மையான ஆற்றல் மூலம் எது?
13. பீட்டா கதிர்களை கண்டறிந்தவர் யார்?
14. முதன் முதலாக மின்காந்த அலைகளை அதிக தூரம் அனுப்பிய விஞ் ஞானி யார்?
15. ‘நிகும்பலை’ சிறுகதையின் ஆசிரியர்?

விடைகள் :

1. கூற்றம், 2. தாதாபாய், 3. ஹேவண்டிஷ், 4. கண்ணாடி, 5. பாசிகள், 6. பிரான் சிஸ்டே, 7. எலிடேரியா கார்டமோமம், 8. வ.உ.சிதம்பரனார், 9. இன்வார், 10. பிரம்மபுத்திரா, 11. பஞ்சாப், 12. நிலக்கரி, 13. எர்னஸ்ட் ரூதர் போர்டு, 14. பெயர்ட், 15. புதுமைப் பித்தன்.

S.JANAKI
STD X
GOOD SHEPHERED
M.H.S, School Chennai



# மூன்றேமாதத்தில்... குழந்தைச்செல்வம் தரும்

# சதுரகிரி அமிர்தம்!

குழந்தைச் செல்வம் மூன்று மாதத்தில் கிடைக்க சதுரகிரி அமிர்தம்!!! குழந்தையின்மை சமீப காலங்களில் அதிகம் கேட்கப்படும் சொல்லாகியிருக்கிறது. கருத்தரிப்பதை குழந்தை பாக்கியம் என்று சொல்வதில் இருந்தே அதன் முக்கியத்துவம் எந்த அளவிற்கு உன்னதமானதுஎன்பதை உணரலாம். இல்லை ஒரு பிள்ளை; என்ற குறையுடன் மருத்துவமனைகளைத் தேடிச் செல்வோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது.

அதற்கான வசதிகளுடன் கூடிய மருத்துவ மனைகளும் இன்று பெருகிவிட்டன. அதே சமயம் நிபுணத்துவம் வாய்ந்த மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும்போதுதான் அதன் நம்பகத்தன்மை கூடுகிறது. சிகிச்சையின் அடிப்படை ஒன்றுதான் என்றாலும் குழந்தையின்மைக்கு என்ன காரணம் அதற்கான் தீர்வு என்ன? நவீன மருத்துவத்தில் அதற்கான சிகிச்சை என்ன? எந்த காலகட்டத்தில் எப்படி சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதையெல்லாம் கவனிக்க வேண்டியது அவசியம், மருத்துவத்தில் ஆழ்ந்த அனுபவம் கொண்டவர்களால் மட்டுமே அது சாத்தியப்படும். குழந்தையின்மைக்கு சிகிச்சை எடுப்போர் அத்தகைய மருத்துவரை தேர்ந்து எடுப்பதுதான் முதலில் தெரிந்துகொள்ள வேண்டிய பாடம். கர்ப்பம் தரிக்காமல் போவதற்கு ஆண்களிடம் ஒரு குறையை மட்டும் சுட்டிக்காட்ட முடியாது. முழுமையான சோதனைக்கு பின்னரே என்ன குறைபாடு என்பதை கண்டறிய முடியும்.

அதற்கு ஏற்ற சிகிச்சையை செய்தால் பலன் பெறலாம். ஆண்களுக்கு விந்தணுக்களின் எண்ணிக்கை 15 மில்லியன் அளவில் இருந்தால் அவர்களுக்கு குறைபாடு இல்லை எனலாம். உயிர் அணுக்களின் இயங்குதன்மை **( Motility)** 39 சதவீதம் அதன் அமைப்பு **(Morphology)** 4 சதவீதமும் இருக்க வேண்டும். என்கிறது உலக சுகாதார நிறுவனம். **(W.H.O)** இவற்றில் வித்தியாசம் இருந்தால் , அவர்களுக்கு குறைபாடுகள் இருக்கிறது என அறிந்து கொள்ளலாம். பரிசோதனைகளின் மூலம் இவற்றை கண்டறிந்து சிகிச்சை பெற வேண்டும். உயிர் அணுக்களின் தரம் குறைவாக இருப்பதும், குழந்தை பிறப்பை தள்ளிபோடும். சில பெண்களுக்கு கர்ப்பம் தரித்தது முதல் அல்லது அடுத்த மாதங்களில் கரு கலைந்துவிடும். இப்படியே பல முறைகள் தொடர்ந்து நடக்கும்.

**IVF** சிகிச்சையை தொடர்ந்து மேற்கொண்டாலும் தோல்வியிலேயே முடியும். ஆணின்விந்தணு தரம் குறைந்ததாக இருந்தாலும் அது பாதிக்கப்பட்டு இருந்தாலும் இவ்வாறு நிகழும், செயற்கை கருத்தரிப்பில் ஆணின் உயிரணுவை, பெண்ணின் அணுவோடு சேர்த்து கரு உருவாக்கப்படும் அந்த கருவானது ஐந்து நாட்களுக்கு பின்னர் **( 5th day Transfer )** பெண்ணுடலுக்குள் செலுத்துவர். இதனை பிளாஸ்டோசிஸ்ட் **( Blastocyst IVF )** என்பர் இவ்வாறு சேர்க்கப்பட்ட கருவில் முதல் மூன்று நாட்களில் தாயின் மரபணுக்கள் **( Maternal DNA )** சார்ந்த வளச்சியும் அடுத்த 2 நாட்களில் தந்தையின் டி.என்.ஏ, வளர்ச்சியும் இருக்கும். சில சமயங்களின் முதல் மூன்று நாட்களில் கரு வளர்ந்தவுடனே அதனை கர்ப்பபையில் சேர்த்து விடுவர், ஒரு வேளை அடுத்த இரண்டு நாட்களில் தந்தையின் டி.என்.ஏ, வால் உண்டாக கூடிய வள்ர்ச்சியில் குறைபாடு இருப்பின் அந்த கரு விரைவில் கலைந்து போகும் அபாயம் உண்டு. 2 அல்லது அதற்கு மேற்பட்ட முறைகள் கூட **IVF** செய்தும் குழந்தை பெற்றுக்கொள்ள முடியாதோரைக்கூட **ICSI, IMSI, PICSI** முறைகள் மூலம் சோதனை செய்து சிகிச்சையளித்து பயன் இல்லாமல் எந்த நிலையாக இருந்தாலும், குழந்தை பெற்றுக் கொள்ள முடியவில்லையே என்று ஏங்கத் தேவையில்லை தங்கள் பிரச்சனைகளுக்கு ஏற்ப சதுரகிரி ஹெர்பல்ஸ் சித்த மருத்துவத்தில் சதுரகிரி அமிர்தம் என்ற அதிசய மருத்துவ பானம் உள்ளது. இப்பானத்தை குடித்து வர மூன்று மாதத்திற்குள் குழந்தை பாக்கியம் கிடைப்பது நிச்சயம். இந்த பானத்தை







பயன்படுத்தி 30 க்கு மேற்பட்டவர்கள் மகிழ்சியாக உள்ளனர் அவர்களின் தொடர்பு எண்களும் கீழே கொடுக்கப்படும். சதுரகிரி அமிர்தம் என்பது மலைவாழ் மக்களால் கண்டறியபட்ட மகிழ் பழமும், சந்தன பழம் ஆகிய இரண்டும் சேர்த்து அவர்கள் திருமண காலங்களில் உண்பது வழக்கம். காரணம். வனத்திலிருக்கும் மந்தி, குரங்கு, பறவைகள் போன்ற விலங்குகள் உடலுறவின் சேர்க்கையின் போது இப்பழங்களை சாப்பிடுவது வழக்கம். இதை கண்ட மலைவாழ் மக்கள் பயன்படுத்தி குழந்தையின்மை என்ற சொல்லுக்கு இடமில்லை என்று வாழ்கிறார்கள். இவர்களுக்கு பணச்செல்வம் குறைவு என்றாலும், குழந்தைச்செல்வத்தோடு சந்தோஷமாக இயற்கையோடு ஒன்றி வசிக்கிறார்கள். இந்த பானத்தின் பயன்கள்.ஆண், பெண் இருவர்க்குமே உடலிலுள்ள சூட்டை தணித்து,உடலில்அனைத்து குறைபாடுகளையும் நீக்கி மகப்பேறுக்கான வாய்ப்பைத் தருகின்றது...

## பலன் அடைந்தவர்களின் விவரங்கள்

* திரு. சிவக்குமார் அவர்கள், உடுமலைபேட்டை 9842535018 இவர்களுக்கு 5 ஆண்டுகளுக்கு பின் பெண் குழந்தை பிறந்தது.

திரு.பிரகாஷ் பாண்டியன் அவர்கள் கான்சாபுரம் 9843311886 இவர்களுடைய அக்காவுக்கு 3 ஆண்டு களுக்கு பின் ஆண் குழந்தை பிறந்தது.

திரு. வில்வம் அவர்கள்சென்னை 9840325794 , 9791791056 இவர்களுடைய நண்பர்க்கு 9 ஆண்டுகளுக்கு பின் பெண் குழந்தை பிறந்தது.

திரு. பெத்துராஜ் அவர்கள் கான்சாபுரம் 9944646655 இவர்களுடைய நண்பர்க்கு 6 ஆண்டு களுக்கு பின் ஆண் குழந்தை பிறந்தது.

திரு . குமரன் அவர்கள் சிவகாசி 9843775376 இவர்களுக்கு ஒரு குழந்தை ஏற்கனவே உள்ளது. அதன் பின் 5 வருடமாக 2 வது குழந்தைக்கான முயற்சி பின்தங்கிய நிலையில் தற்போது அழகான பெண் குழந்தை பிறந்தது.

திரு. மனோகரன் அவர்கள் சேலம் 9944632021 இவர்களுக்கு 4 ஆண்டுகளுக்கு பின் 7 மாதம் கர்ப்பமாக உள்ளார்.

திரு. வீரமணி அவர்கள் திருப்பரங்குன்றம் 9894543619 இவர்களுக்கு 2 வருடங்களுக்கு பின் ஆண் குழந்தை பிறந்தது.

திரு. சங்கர் அவர்கள் சிவகாசி, திருத்தங்கல் 9787009795 இவர்களுக்கு 5 ஆண்டுகளுக்கு பின் 9மாதம் கர்ப்பமாக உள்ளார்.

திரு. நந்தகுமார் அவர்கள் திருப்பூர் 9842081012 , 9750873999 இவர்களுக்கு 3 ஆண்டுகளுக்கு பின் பெண் குழந்தை பிறந்தது.

திரு. ராம்குமார் அவர்கள் மதுரை ஶ்ரீ 9629625456 இவர்களுடைய நண்பர்க்கு 2 ஆண்டுகளுக்கு பின் ஆண் குழந்தை பிறந்தது.

திரு. வன்னியவேல் அவர்கள் **V.V.S.** ஆனந்தம் நல்லெண்ணெய் விருதுநகர் 94890 56677 இவர்களுடைய நண்பர்க்கு 2 ஆண்டுகளுக்கு பின் பெண் குழந்தை பிறந்தது.

திரு. சந்தானம் அவர்கள் திருச்சி 9865607981, 9790194655இவர் பெரிய கடை வீதி உச்சி பிள்ளையார் கோவில் அருகில் நாட்டு மருந்துக் கடை வைத்துள்ளார். அங்கு வரும் அன்பர்கள் சதுரகிரி அமிர்தம் வாங்கி அதிக அளவில் பயன் பெறுகின்றார்கள்.

திரு. கோபால்சாமி வைத்தியர் அவர்கள் திருப்புவனம் 848916970 இவர்களுடைய அன்பர்களுக்கு சதுரகிரி அமிர்தம் கொடுத்து பயன் பெற்று வருகின்றனர்.

திரு. பாலமுருகன் அவர்கள் தாணிப்பாறை 8508809315 இவர்களுடைய நண்பர்க்கு 4 ஆண்டுகளுக்கு பின் ஆண் குழந்தை பிறந்துள்ளது. மேலும் இவர் சதுரகிரி தாணிப்பாறை அடிவாரத்தில் உள்ள கடையில் வசிக்கிறார் .

சதுரகிரி மலைக்கு செல்லும் பக்தர்கள் விவரம் தெரிய இவர்க்கு தொடர்பு கொள்ளலாம்.



# இனி தேர்வுகளும் ஸ்மார்ட் போனில்..




**S.Suruthi Lakshmi**
**XII - STD**
**VIDYAA VIKAS**
**MAT.HR.SEC.SCHOOL**
**KARAMADAI**



செல்போனுக்குத் தடை என்பது பரவலாகப் பல்வேறு கல்லூரி வளாகங்களிலும் அமலில் இருப்பது. கல்லூரி மாணவர்களுக்கு ஸ்மார்ட் போன் கவனச் சிதறலாகும் என்பது கல்லூரி நிர்வாகம் இதற்குத் தரும் விளக்கம். பெற்றோர்களும் இந்தக் கட்டுப்பாட்டுக்கு உடன்படுகின்றனர். இந்த நிலையில்தான் புதிதாக வந்திருக்கும் சில செயலிகள் ஸ்மார்ட் போன்களைக் க்ல்லூரி வளாகத்துக்குள் குறிப்பாகத் தேர்வறைக்கே கொண்டுசெல்கின்றன. ஸ்மார்ட் போன் ஆப்ஸ் அடிப்படையிலான தேர்வுகள் நாட்டின் பெருநகரக் கல்லூரிகளில் பிரபலமடைந்து வருகின்றன.

செயலி வழி பாடச் செயல்கள் என்பது பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு ஏற்கனவே பரிச்சயமானவை. பாடக் குறிப்புகள், திருப்புத்ல்கள், தேர்வுக்கான தயாரிப்புகள், பாடம் சார்ந்த மற்ற உதவிகள் என ஏராளமான செயலிகள் சந்தைகளில் இலவசமாகவும் குறைவான கட்டணத்திலும் கிடைக்கின்றன. இதன் அடுத்த கட்டமாக அறிமுகமாகி இருப்பதே தேர்வுக்கான செயலிகள்.

இந்த முறையில் தேர்வறைக்குள் ஸ்மார்ட் போனுடன் மாணவ-மாணவிகள் அனுமதிக்கப் படுகின்றனர். இணைய இணைப்புக்கு மாறாக வை-பை வாயிலாக ஆசிரியர் அல்லது தேர்வறைக் கண்காணிப்பாளார் வசமிருக்கும் பிரத்யேகக் கருவி மூலம், மாணவர்களின் மொபைல்கள் இணைப்பு பொறுகின்றன. மொபைல்களில் பதிவிறக்கம் செய்யப்பட்டிருக்கும் செயலி வழியாக வினாத்தாள் வினியோகம் நடைபெறுகிறது. இணைய இணைப்பு இல்லாததால் ஸ்மார்ட் போனில் விடைகளைத் தேட முடியாது. வேறு ஏதேனும் முறைகேடுகளை செல்போனில் மேற்கொண்டாலும் அது உடனுக்குடன் தெர்வு கண்காணிப்பாளரை எச்சரிக்கை செய்யும். வினாத்தாளில் வினாக்களின் வரிசை என்பது தாறுமாறாக மாறியிருக்கும் என்பதால், மாணவர்கள் ஒருவருக்கொருவர் காப்பியடிப்பது இங்கே கடினம்.

தேர்வு முடிந்த சூட்டில் செயலிவாயிலாகவே முடிவுகளை அறிந்துகொள்வதும் எளிது. மாணவர்கள் பதிலளித்த விதம், கடினக் கேள்விகள், அதிகம் தவறு இழைத்தவை உள்ளிட்ட பல்வேறு தகவல்களை ஆசிரியர் அறிந்துகொள்ளவும் இந்தச் செயலியில் வகை செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் கடின மற்றும் குழப்பமான பகுதிகளை ஆசிரியர் வகுப்பறையில் மீண்டும் கற்பிக்கவும், அதன் வழியே மாணவரின் கல்வித்திறனை மேம்படுத்தவும் வாய்ப்பாகிறது.

கணினி வாயிலான ஆன்லைன் தேர்வுகள் பரவலாகிவரும் காலத்தில் அதன் அடுத்த பாய்ச்சலாகச் செயலிவழித் தேர்வு முறை பார்க்கப்படுகிறது. இந்த வகைத் தேர்வுகளில் அப்ஜெக்டிவ் வகை, கோடிட்ட இடத்தை நிரப்புக, சரியா அல்லது தவறா உள்ளிட்ட ஒரு மதிப்பெண் அடிப்படையிலான தேர்வுகளே நடை பெறுகின்றன.



# ஜெயித்துக் காட்டுவோம்!

எஸ்.வி.ஆர்.வி.கே.வாசன்

எத்தனையோ வேதனைகளைத் தாண்டி தனது முழு முயற்சியால் வாழ்வில் வெற்றிபெற்றவர்கள் அத்திப்பூவை போல் அரிதாக காணப்படுகிறார்கள், என்ன இல்லை நம்மிடம் இன்னும் என்ன வேண்டும் நமக்கு, ஏன் இத்துணை போராட்டங்கள் என்று யோசித்து பார்த்தல் நாம் அனைவரும் செல்லும் பாதை நம்மை எங்கு கொண்டு செல்லும் என்பதை பற்றி எந்த ஒரு தீர்மானமும் இல்லாமல், ஏதோ பிறந்தோம் வாழ்கிறோம் ஒரு நாள் இந்த புவியை விட்டு சென்று விடுவோம், என்று செயல்படும் மனிதர்களுக்குள், நான் ஜெயிக்க பிறந்திருக்கிறேன், ஜெயிப்பது மட்டுமே எனது குறிக்கோள், என் எண்ணம், செயல், மனம் எல்லாம் நான் வெற்றியடைய மட்டுமே என்று ஒரு தீர்மானத்துடன் செயல் படும் அனைவருக்கும் இந்த கட்டுரையை சமர்ப்பிக்கிறேன்.

முதலில் வெற்றி என்பது என்ன என்று நாம் தெரிந்து கொள்வோம், அழகான சொந்த வீடு, மனைவி மக்கள் மற்றும் கை நிறைய சம்பளம் எந்த ஒரு குறையும் இல்லாத ஒரு வாழ்க்கை என்பதே வெற்றி என்று அனைவரும் நினைக்கிறார்கள், உண்மை இது சிலரின் கனவாக கூட இருக்கும் ஆனால் இதில் கூறப்பட்டுள்ள எதுவும் நிரந்தரம் கிடையாது, வெற்றி என்பது நமது சுயநலமான வெற்றி கிடையாது, வெற்றியை தீர்மானிப்பது நாம் செய்யும் செயல் தான், நாம் இந்த உலகை விட்டு சென்று விட்டால் கூட அனைவரின் மனதிலும் இடம்பிடிக்க வேண்டும், இந்த உலகமே நமது செயலை நினைத்து பெருமை பட செய்ய வேண்டும் ஒவொருவரும் நமது உற்றார், உறவினர்கள், மக்கள் அனைவரும் இப்படி ஒரு மகனை பெற்று எடுக்க என்ன தவம் செய்தார்களோ என்று நினைத்து நினைத்து பூரிப்பு அடைய வேண்டும்.

ஒரு சாதாரண மனிதனாக பிறந்த நாம் மகானாக மாற வேண்டும் இது தான் நிரந்திர வெற்றி என்பதன் அடையாளம் ஆகும்.

இது எப்படி சத்தியம்? முதலில் நாம் வெற்றி பெறுவதற்கு நம்மிடம் தியாக எண்ணம் அதிகமாக இருக்க வேண்டும். இந்த கட்டுரையின் மூலம் நான் மிகவும் சாதாரணமாக இருக்கும் எவரும் இந்த சமுதாயத்தின் ஒரு மாபெரும் அடையாளமாக மாற முடியும், அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்று மிகவும் எளிதாக குறிப்பிட்டு உள்ளேன். இதை படிக்கும் அனைவரின் மனதிலும் எல்லாவிதமான தீய எண்ணங்களும் அழிந்து முழுமையாக வெற்றி பெறுவதற்கு தேவையான அனைத்தையும் ஒவ்வொரு குறிக்கோளாக ஒரு நல்ல தலைப்புடன் கூற உள்ளேன்.



**உலக மக்கள் நன்மைக்காக**

# சிவஸ்ரீ ப்ரத்யங்கிரா தேவி யாகம்!

அண்மைக் காலமாக சிவஸ்ரீ ப்ரத்யங்கிரா தேவி பற்றிய விழிப்புணர்வு அனைவருக்கும் ஏற்பட்டு வருகின்றது. யாரிந்த சிவஸ்ரீ ப்ரத்யங்கிரா தேவி?



சிவபெருமானின் நெற்றிக்கண் ஒளியில் இருந்து அவதரித் தவள். உக்கிரமான ஸ்வரூபம் படைத்தவள் என்பதால் இவளை உக்ர மாகாளி, பத்ரகாளி என்றும் அழைப்பர். இவள் ஸ்ரீ சரபேஸ்வரரின் மேனியில் உதித்தவள். கண்ட பேருண்ட பட்சியை அழித்து அதன் சக்தியைத் தனதாக்கிக் கொண்டவள். இப்பெரு ந்தேவி உக்ரமூர்த்தியே என்றாலும், மிகச்சாந்தமான குணம் கொண்டு கேட்ட வர்க்குக் கேட்ட வரம் தந்து இவ்வுலகை, தாய் போல் காத்து ரட்சிப்பவள். இவளை நினைப் பவர்களுக்கும், பூஜிப்பவர் களுக்கும், வேள்வி செய்பவர்களுக்கும் நலம் புரிந்து வருகின்றாள். இதனை ருத்ரயாமள தந்த்ரம் உணர்த்துகின்றது.

இவள் சுபமளித்து சுகம் தருபவள். சர்வ சித்தியும் தருபவள். மூலிகைகள் மூலம் ஹோமம் செய்தால் மனம் மகிழ்ந்து பல நன்மைகளை உங்களுக்கு அருள்வாள். இவள் சர்வ வல்லமை படைத் தவள். உக்கிரமான சிங்க உருவங் கொண்டு விளங்கு பவள். ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களுக்கேற்ப ஸ்ருஸ்டி ஸ்த்திதீ லயத்தைச் செய்பவள் என்கிறது தந்திர சாஸ்திரம்.



இக்கலியுகத்தில் எதிரி களை வெல்வதற்கு பத்ர காளியான சிவஸ்ரீ ப்ரத்யங் கிரா தேவியின் அருள் அவசியம் தேவையென வேத சூட்சமம் சொல் கிறது.

இந்த ஸ்ரீப்ரத்யங்கிரா லோக மாதா, மஹா மஹேஸ்வரி எனப் புகழப்படுபவள். சிவஸ்ரீ ப்ரத்யங்கிரா தேவி என்று பிரசித்தி பெற்றவளும் இவளே!



சகல உலகையும் படைத்து தாங்கும் சர்வ வல்லமை வாய்ந்தவள்.



இந்த ஸ்ரீ ப்ரத்யங்கிரா தேவி. இப்பூவுலகில் எங்கும் காணாத வகையில் மந்தகாசப் புன்னகை யுடன் வீராசனத்தில் வீற்றிருக்கும் அன்னை.

தமது திருக்கரங்களில் ராகு, கேதுவை அடக்கிய நிலை உங்கள் எதிரிகளை அடக்க. வலது திருக்கரத்தில் திரிசூலம், இடது திருக்கரத்தில் கபாலம் ஏந்திய காலகண்டி. காலச்சக்கரம் காலபைரவரின் திருவடியின் கீழ். அஷ்ட பைரவப் பெருமானே வந்து வணங்கும் அற்புத காளராத்திரி தேவி.

காளசர்ப்ப தோஷம், சர்ப்ப தோஷம், களத்திர தோஷம் போக்கி அபயம் அளிக்கும் ஆனந்தநிலை. திருமணத் தடை விலக்கி புத்திரபாக்கியம் அருளும் புவனமாதா. செய்வினை தோஷம் போக்குபவள்.

சிவஸ்ரீ ப்ரத்யங்கிரா தேவி, இக்கலியுகத்தில் கேட்டதைத் தந்து பக்தர்களுக்குப் பாதுகாவலாய் இருக்கும் பத்ரகாளியும் இவளே!

சிவஸ்ரீ ப்ரத்யங்கிரா ஹோமம் செய்பவர்களுக்கு சகல ஐஸ்வர்யம் தந்து சுகமளிப்பவள். இவளை நோக்கி ஓரடி தவழ்ந்தால் போதும். ஓடோடி வந்து ஆதரிக்கும் தாய் அவள். அன்னையின் திருவடி மோட்சம் தரும். பரம பதத்தையும் தரும்.

வறுமை, வியாதி, பகை, ஏவல், பில்லி, சூனியம் அழிக்கும்.

அமைதி, சந்தோஷம், ஆரோக்கியம், செல்வ வளம் நிறைந்த குடும்ப வாழ்க்கை, உயர்ந்த கல்வித்திறன், செயல் திறன், தொழில் திறன், ஆக்கப் பூர்வமான சிந்தனைத் திறன், வியாபார அபிவிருத்தி, சிறந்த வேலைவாய்ப்புகள், தன்னம்பிக்கை மிகுந்த வாழ்க்கையுடன் உங்களின் முயற்சிகளில் வெற்றியும் தருவாள், அன்னை சிவஸ்ரீ ப்ரத்யங்கிரா தேவி.

ஸ்ரீ ராமர் இத் தேவியைப் பூஜித்த பின்னரே, இராவணனை வெற்றி கொண்டார் என்று ராமாயண காவியம் உணர்த்து கின்றது. சிவஸ்ரீ ப்ரத்யங்கிரா தேவியின் மனம் மகிழும் மூலிகைகள், மிளகாய், நெய் கொண்டு வேள்வி செய்வதால் எமபயம், நோயின் தாக்குதல், முன் ஜன்ம பாவ தோஷங்கள், பில்லி, சூனியம், ஏவல் போன்றவை எரிந்து சாம்பலா கின்றது. இந்த ஹோமத்தினால் சகல தோஷமும் விலகி சந்தோஷம் மலர்கின்றது.



ஹோமத்தில் உதயமாகும் அன்னையை வந்து பணிபவர்களின் வாழ்க்கையில் ஏற்றம் பிறக்கும். குழந்தைகளின் கல்வியில் மேன்மை ஏற்படும். வாழ்வில் தரித்திரம் நீங்கி செல்வ வளம் ஏற்படும். குடும்பத்துடன் சங்கல்பம் செய்து கொள்வது உயர்ந்த பலன் தரக் கூடியது. முன்னதாகப் பதிவு செய்து கொண்டு பலன் பெறலாம்.

**தவத்திரு. சக்தி சுவாமிகள்**
**அலைபேசி: 9524591892/ 9499928479.**


## ஆசிரியர் எம்.எஸ்.மூர்த்தியின் “நமக்குள் நாம்“ நூல் வெளியீட்டு விழா !

11-3-2018 அன்று சென்னையில் நடைபெற்ற விழாவில் ஆசிரியர் எம்.எஸ். மூர்த்தியின் “நமக்குள் நாம்“ நூல் வெளியிடப்பட்டது. நூலினை மாண்பமை நீதியரசர்கள் திரு. டி.என். வள்ளிநாயகம், திரு. எஸ்.கே. கிருஷ்ணன் ஆகியோர் வெளியிட தொழிலதிபர்கள் திரு. என். முனிரத்தினம் நாயுடு, திரு. கலியபெருமாள்(கே.பி.), திரு. ஜி.மணிலால் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். விழாவில் திரு. தனஞ்ஜெயன் **(I. A. S. RETD.),** திரு. முத்துவீரன்( **I.A.S.RETD.),** திரு. செல்லமுத்து **(I.A.S. RETD.)**, திரு. சக்கரவர்த்தி (பா.ஜ.க.), தமிழக நகராட்சி நிர்வாகத்துறை இணை இயக்குனர் திரு. செபாஸ்டியன், வழக்கறிஞர் வே. காசிநாதன், சன் டி.வி. முன்னாள் **C.E.O.** சக்சேனா, திரைப்பட நடிகர்கள் ஆடம், பாபு கணேஷ், யதார்த்த ஜோதிடர் ஷெல்வி, லஷ்மி மில்ஸ் ஸ்ரீ நாகேஷ், திரைப்பட நடிகர் பூவிலங்கு மோகன், சாய் இண்டர்நேஷனல் எஸ். பாஸ்கர், அக்குபங்சர் டாக்டர் எம். என். சங்கர் ஆகியோர் பங்கேற்றனர்.



விழாவில் வெ. ஜெயஸ்ரீ-. லோகேஷ் இளம் தம்பதியினருக்கு வாழ்த்து தெரிவித்து, “நமக்குள் நாம்“ புத்தகத்தை சிறப்பு விருந்தினர் வழங்கினார் உடன் மணமக்களின் பெற்றோர்.





மலர் தயாரித்த குழுவினருக்கு ஆசிரியர் பாராட்டு



# ஏழ் பதில்கள்



## ஈரோடு தி.மு.க. மாநாடு பற்றி?

ஈரோட்டில் கடந்த 24 மற்றும் 25 ஆகிய தேதிகளில் திமுக மண்டல மாநாடு சிறப்பான முறையில் நடைபெற்றது. மிகப் பிரம்மாண்டமான மாநாட்டு பந்தல் தமிழக அரசியல் களத்தையே மாற்றிப் போடும் அளவிற்கு சிறப்பாக நடந்த இந்த மாநாட்டில் திமுக தொண்டர்கள் உற்சாகமாக பங்கேற்று இருக்கின்றனர். தி.மு.க. தலைவர் கலைஞர் மாநாட்டிற்கு வராத குறையை செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் பூர்த்தி செய்து, கலைஞரிடமும் தொண்டர்களிடமும் பாராட்டைப் பெற்று இருக்கிறார்.



## சசிகலா புஷ்பா எம்.பி.யின் திருமணம் குறித்து என்ன நினைக்கின்றீர்கள்?

பிரபலங்கள் என்ன செய்தாலும் பிராப்ளமே என்னும் நிலை சகஜமாகி வருகின்றது. ஒருவருக்கு ஒருத்தி என்கிற தமிழ்ப்பண்பாடு காற்றில் பறக்கின்றது. ஏற்கனவே மணமானவர், தடையை மீறி திருமணம் என்பதெல்லாம் தமிழக மக்களை வேடிக்கை பார்க்க வைத்திருக்கின்றது. அவர் சார்ந்த கட்சிக்குமே கெட்ட பெயரை ஏற்படுத்தி இருக்கின்றது.



# ஏழ் பதில்கள்

## ஸ்டெர்லைட் விவகாரம் முற்றியுள்ளதே?

தூத்துக்குடி மட்டுமல்ல, பக்கத்து மாவட்டங்களிலும் போராட்டம் வெடிக்கத் துவங்கியுள்ளது. போபால் விஷவாயு தாக்குதல் சம்பவம் போல ஆகி விடக்கூடாதே என்று அண்மையில் அரசியல் பிரவேசம் செய்திருக்கும் மக்கள் நீதி மய்யத் தலைவர் நடிகர் கமலஹாசனும் போராட்டத்தில் ஈடுபட்டதால் விஷயம் பெரிதாகி இருக்கின்றது.






## அண்மையில் நடந்த ஐ ஓ பி வங்கிக் கொள்ளை எதைக் காட்டுகிறது?

திரைப்படங்களில் வருவதைப் போன்று நடந்திருக்கின்றது. வேலியே பயிரை மேய உதவியிருக்கின்றது. வங்கிக்காவல் பணியில் இருந்த நேபாளிகள் உதவியுடன் இது நடந்திருக்கின்றது.

## ரஜினி கமல் வெற்றி எப்படி?

ஏற்கனவே ரஜினி கமலின் அரசியல் பிரவேசம் குறித்து மித்ரா டைம்ஸ் கட்டுரை வெளியிட்டுள்ளது. காவிரி பிரச்சனைக்கு ஆதரவாக ரஜினி சொல்லப்போக கர்நாடகத்தில் அது பிரச்சினையைக் கிளப்பி இருக்கிறது. வெகுநாள் கழித்து அரசியலுக்கு வந்தவரை சர்ச்சைக்கு உள்ளாக்கி இருக்கிறது. ஆற்றில் ஒரு கால், சேற்றில் ஒரு கால் வைத்த நிலை ரஜினிக்கு.

கமலைப் பொறுத்த வரை ஓரளவு இப்போதைக்கு தெளிவாக இருக்கிறார். மக்களை மய்யப்படுத்தி போராட்டங்களில் குதித்துப் பேர் வாங்கி வருகின்றார்.



# ஆரூர் தியாகராஜர் அற்புத தலம் பற்றி

## அரிய தகவல்கள்!

சைவ கோவில் களில் மிகப் பெரியது இதுவே. கோவில் ஐந்து வேலி, குளம் ஐந்துவேலி, ஓடை ஐந்துவேலி என்பர்.

உலகிலேயே மிகப்பெரிய தேர் திருவாரூர்த் தேர்தான். திருவாரூர் கோவிலில் சோழப் பேரரசர்கள், நாயக்கமன்னர்கள், மராட்டிய மன்னர்கள் ஆகியோர் திருப்பணி செய்துள்ளனர். திருவாரூர் கோவில் பழமைச் சிறப்புடையது. தில்லை கோவிலையும் விட பழமையானது.

சேக்கிழார் இந்நகரம் தொன்மையானது என்றும், இது திருமகளால் வழிபடப் பெற்றது என்றும், சுந்தரர் பொருட்டுப் பரவையிடம் தூது நடந்த இறைவனின் தாமரையடிகளின் மணம் தெருவில் வீசுகிறது என்றும் குறிப்பிடுகிறார்.

கழற்சிங்க நாயனாரின் பட்டத்தரசி இறைவனுக்குரிய மலரினை எடுத்து முகர்ந்து பார்த்தாள் என்பதற்காகச் செருந்துறை நாயனார் அவள் மூக்கை அரிந்தது இத்தலத்தில்தான்.இவ்வாலயம் தியாகராசர் திருக்கோவில் என்று இன்று அழைக்கப்படுகிறது. இதனுள் தேவாரத் தலங்களான பூங்கோவில், அரநெறி ஆகிய இரண்டும் அமைந்துள்ளன.

சப்தவிடங்கத் தலங்களுள் முதலாவது இத்தலமாகும். நாகைக்காரோணம், திருநள்ளாறு, திருமுறைக்காடு, திருக்காறாயில்,திருவாய்மூர், திருக்குவளை என்பன மற்ற சப்தவிடங்கத் தலங்களாகும். திருவாரூர் கோவிலுக்கு கமலாலயம் என்ற திருப்பெயரும் உண்டு. திருமகள் வருணனின் மகளாக பிறந்து திருமாலை மணம்புரிந்து கொள்வதற்காக புற்றிடங்கொண்ட பெருமானை வழிபட்டு வரம் பெற்றாள். அதனால் இத்தலத்துக்கு கமலாலயம் என்னும் பெயர் வந்தது.


திருவாரூர் கோவிலில் உள்ள தேவாசிரிய மண்டபம் பெருஞ்சிறப்புக் குரியது. இங்கேதான் பெரிய புராணத்தின் முதல் நூலான திருத்தொண்டத் தொகை பிறப்பதற்கு காரணமான அடியார்கள் எழுந்தருளினார்கள். திருத்தொண்டத் தொகை பிறந்த இடமும் இதுதான்.

தேவாரப் பாடல்களை அதிகமாகப் பெற்ற ஆலயங்களுள் இரண்டாவதாக திகழ்வது திருவாரூர். முதலாவதாக திகழ்வது தோணிபுரம். அதற்கு 71 பதிகங்கள் உள்ளன. இதற்கு 34 பதிகங்கள் இருக்கின்றன.

பஞ்ச பூதத் தலங்களுள் திருவாரூர் பிருதிவி(மண்) தலமாகத் திகழ்கிறது. காஞ்சீபுரத்தையும் பிருத்திவித் தலமாகச் சொல்வதுண்டு.

திருவாரூரில் பிறக்க முக்தி என்பார்கள்.

முதலாம் ஆதித்தன் (கி.பி. 871 907) காலக் கல்வெட்டு முதல் 19ம் நூற்றாண்டில் வாழ்ந்த மராத்திய மன்னர் சரபோஜி காலம் வரையிலான கல்வெட்டுக்கள் கோவிலில் காணப்படுகின்றன.



அருள்மிகு வீதி விடங்கர் அருள்தரும் கமலாம்பிகை

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றாலும் சிறந்து விளங்குவது திருவாரூர் ஆகும். திருவாரூரில்தான் சுந்தரமூர்த்தி சாமிகளின் அருள்வாழ்வு மலர்ந்தது. திருவாரூர் கோவில் கட்டப்பட்ட காலம் வரையறுத்துக் கூறப்படவில்லை. தமிழகத்தை ஆண்ட புகழ் பெற்ற மன்னர்களின் கைவண்ணமும் கல்வெட்டுகளும் இத்திருக்கோவிலில் இடம் பெற்றுள்ளன. திருஞான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர் ஆகிய நால்வராலும் பாடப்பெற்றது திருவாரூர். 330 தேவாரப் பாடல்களும், திருவாசப் பாடல்களும் உள்ளன.

அருணகிரிநாதர், சங்கீத மும்மூர்த்திகள் தியாகையர், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள், கயிலை ஞானப்பிரகாசர், குருஞான சம்பந்தர், இரட்டைப் புலவர், அந்தகக் கண் வீரராகவ முதலியார், மாமன்னார் சகாஜி, வள்ளலார் ராமலிங்க அடிகளார் முதலானோராலும் திருவாரூர் திருத்தலம் போற்றிப் பாடப் பெற்றுள்ளது.

ஸ்ரீ தியாகராஜ சாமி கர்ப்பக்கிரக விமானத்துக்கு தங்கத் தகடு போர்த்தி முதலாம் ராஜேந்திர சோழன் குடமுழுக்கு செய்ததாக இக்கோவிலின் கல்வெட்டு கூறுகிறது.

17ம் நூற்றாண்டில் தஞ்சையை ஆண்ட மன்னர் சரபோஜி திருவாரூர் தியாகராஜர் மீது தமிழில் பலநூறு கீர்த்தனைகள் பாடியுள்ளார்.

இக்கோவில் அம்பிகை ஞானசக்தியாகவும் (கமலாம்பிகை) கிரியா சக்தியாகவும் (நீலோத்பலாம்பாள்) இச்சா சக்தியாகவும் (கொண்டி) வடிவு கொண்டு அருள் புரிகிறாள். மதுரையில் இறைவன் 64 திருவிளையாடல்கள் புரிந்தது போல் இவ்வூர் தியாகராசர் பெருமாள் 364 திருவிளையாடல்கள் புரிந்ததாகப் புராண வரலாறு கூறுகிறது. தியாகராஜ சாமியை திருமால் தன் மார்பில் வைத்து வழிபட்டாராம். அவரின் மூச்சுக் காற்றாய் விளங்குவதால் தியாகராஜ சாமிக்கு அஜபா நடனமூர்த்தி என்றும் பெயர்.

சுந்தரமூர்த்தி சாமிகள் இவ்வூர் இறைவன் தியாகராஜாவிடம் தோழமை கொண்டு பழகினார் என்று புராணம் கூறுகிறது. இவர் இழந்த கண்ணில் ஒன்றை மீளா அடிமை உமக்கே என்ற பதிகம் பாடி இக்கோவிலில் பெற்றார்.

எங்குமே கண்டறிய முடியாத எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்ட பரம்பொருளை திருவாரூரில் கண்டு கொண்டேன் கண்டவுடன் அவன்

ஒருவனைத் தவிர மற்ற எல்லாவற்றையும் மறந்து விட்டேன் என்றார் அப்பர் பெருமான். திருவாரூர் தலம் பற்றி செந்தமிழ் இலக்கியங்களில் மட்டுமின்றி வடமொழி, தெலுங்கு, மராத்தி போன்ற பல மொழி இலக்கியங்களிலும் போற்றிச் சிறப்பிக்கப்பட்டுள்ளது. திருவாரூர் எப்போது தோன்றியது என்று கூற முடியாத மிகப்பழமையான புண்ணியத் தலங்களில் ஒன்றாகும்.

திருவாரூர் என்றால் அருமையான ஊர், அரிய ஊர் என்று பொருள். பிரம்மன், விஷ்ணு, பதினோரு ருத்திரர்கள், தேவ தேவியர்கள், இந்திரன் முதலான வானவர்கள், பிற வானலோக வாசிகள் அனைவரும் ஒரே சமயத்தில் ஒன்றாகக் கூடியிருந்து சிவபூஜை செய்து பரம்பொருளை வழிபட்ட அரிய தலம். கோடி முனிவர்கள் ஒரே சமயத்தில் வழிபட்டுக் கோடி வடிவமாக ஈசன் திருக்காட்சியைப் பெற்ற அருமையான அரிய தலம். சப்தரிஷிகள் ஒரே சமயத்தில் ஒன்றாக வந்து சிவபூஜை புரிந்ததாலும் திருவாரூர் என்று பெயர் பெற்றது. திருவாரூர் உலகத்திற்கு மூலாத ாரமாக விளங்குவதால் மூலாதாரபுரம் என்று பெயர் பெற்றது. பெரிய புராணமும் பரிபாடல் என்ற சங்க இலக்கியமும் தேவர்கள் இத்தலத்தில் ஈசனைப் போற்றிப் புரிந்த பூஜையையும் யாகங்களையும் போற்றுகின்றன.

திருவாரூர் கோவிலில் யாக சாலை, மகாயாக சாலை, பிள்ளையார் யாக சாலை, முருகன் யாகசாலை எனப் பல பெயர்களில் யாகசாலைகள் உள்ளன. படைக்கும் தெய்வம் பிரம்மன் நாள்தோறும் சிவபூஜை செய்து வாழ்ந்த தலமாதலால் திருவாரூக்கு பிரம்மமேசம் என்று பெயர்பெற்றது. பல்வேறு திருத்தலங்களிலும் கிடைக்காத வரங்கள் திருவாரூரில் ஆரூரராகிய வான்மீக நாதரையும் தியாகராஜரையும் வழிபடுவதால் கிடைக்கும்.

திருவாரூரில் ஆண்டிற்கு ஐம்பத்திரண்டு திருவிழாக்கள் நடைபெற்று திருவிழா வூராக திகழ்ந்ததைக் கோவில் கல்வெட்டு போற்றுகின்றது.திருவாரூர்ப் பொற்கோவிலைச் சங்கப் புலவர் பரணரின் சிவபெருமான் திருவந்தாதியும் திருநாவுக்கரசர் தேவாரமும் சேக்கிழாரின் பெரிய புராணமும் போற்றுகின்றன. செம்பொன் தியாகர் என்ற பெயர் தியாகராஜர் திருமேனி தங்கத் திருமேனியாகத் திகழ்ந்ததைத் தெரிவிக்கின்றது.

சோழ மன்னர்கள் தியாகராஜ சுவாமிக்குப் பொற்பல்லக்கு முதலியவற்றைக் காணிக்கையாக அளித்ததையும் கோவிலில் பொன்தகடு வேய்ந்ததையும் கோவில் கல்வெட்டுகள் கூறுகின்றன. பட்டினச்சாமி என்ற தாமரைப் பூ வியாபாரி ஒரு வைகாசித் திருநாளன்று தாமரைப் பூக்களை விற்காமல் அத்தனைப் பூக்களையும் ஆனந்தேஸ்வரருக்கு அளித்தார். இதன் பலனாக அந்த வியாபாரி மறுபிறவியில் பாராளும் மன்னர் ஆனார்.

ஆரூர் இறைவனை வழிபட்ட




முனிவர்கள், சித்தர்களின் உருவங்கள் பல்வேறு சந்நிதிகளிலும் சந்நிதிச் சுவர்களிலும் பிரகாரங்களிலும் தூண்களிலும் காணப்படுகின்றன. திருக்குளத்து நாகநாதர் கோவில் கருவறை வாசலிலும் முனிவர் சித்தர் உருவங்கள் உள்ளன. பிள்ளையில்லாத அம்சன் என்ற அரசன் சித்தீஸ்வரரின் திருவருளால் பிள்ளைப்பேறு பெற்றதோடு பல அரிய சித்திகளும் பெற்று சித்தீசன் என்றே பெயர் கொண்டான்.

அரசர்களும் எண்ணற்ற பக்தர்களும் காலந்தோறும் திருவாரூர்ப் பெருமானைப் பூஜித்து வாழ்வும் வளமும் பெற்றுள்ளனர். இவ்வாறு காலந்தோறும் ஆயிரக்கணக் கானவர்களால் பிரதிட்டைசெய்யப்பட்டு பூஜிக்கப்பட்ட லிங்கங்களைக் காட்டும் வகையில் ஆயிரம் சிறுசிறு லிங்கங் களைக் கொண்ட சகஸ்ரலிங்கம் உட்பிரகாரத்தில் உள்ளது.அறுபத்து மூவருள் நமிநந்தி அடிகள், செருத்துணை நாயனார், கழற்சிங்கர், விறன்மிண்டர் ஆகியோரின் முக்தித் தலம். சுந்தரமூர்த்தி நாயனாரின் தாயாரான இசைஞானியார் அவதரித்தத் (கமலாபுரம்) தலம்; இது திருவாரூரிலிருந்து மன்னார்குடிபாதையில் 7கி.மீ. தொலைவில் உள்ளது. இத்தலத்தில் சிவன் கோயில் ஏதுமில்லை (2005). திருவாரூர் தெற்குக் கோபுரத்திற்கு வெளியே,தீபரவையார் வாழ்ந்த கிழக்கு நோக்கிய மாளிகை வளாகத்தில் இசைஞானியாருக்குத் திருவுருவச் சிலை உள்ளது.

திருவாரூர் கோயில், குளம், வீதி, தேர்த்திருவிழா ஆகியவற்றைப் பற்றிய தேவாரத் திருப்பாடல்களைக் கொண்டத் திருத்தலம். திருவாரூர்க் கோயில் தியாகராஜர் திருக்கோயில், திருமூலட்டானம், பூங்கோயில் என்றெல்லாம் சிறப்பிக்கப்படுகிறது.சோழர்கள், பாண்டியர்கள், விசயநகர வேந்தர்கள் ஆகியோரின் கல்வெட்டுகள் மொத்தம் 65 உள்ளன. வாழ்வில் அனைத்து விதமான குற்றங்குறைகளையும் போக்கி வளமான நலமான வாழ்வருளிச் சிறப்புடன் வாழவைக்கும் சிவதலங்களில் இத்தலமும் ஒன்று...











# உன் குறையை சரிசெய் !





**சிரிப்பதற்கல்ல... சிந்திப்பதற்கு..!!!**

ஒருத்தன் தன் மனைவி மேல் அதீத அன்பு வைத்திருந்தான் ஆனால் அவனுக்கு சிறு கவலை கொஞ்சநாளாகவே மனைவிக்கு காது சரிவர கேட்கவில்லை! அவளுக்கே தெரியாமல் அவளது குறையை போக்க நினைத்தான்! ஒரு காது டாக்டரை அணுகி.... டாக்டர் சார்... என் மனைவிக்கு காது கேட்கவில்லை..

எனவே அவளுக்கே தெரியாமல் அந்த குறையை. நீங்கள் தான் போக்க வேண்டும் என்றான்! டாக்டரும் ஓகே... ஆனால்... உங்கள் மனைவிக்கு எவ்வளவு தூரத்தில் நின்று கூப்பிட்டால் காது கேட்கவில்லை என்பது தெரிஞ்சாதானே வைத்தியம் பார்க்க வசதியாக இருக்கும், இல்லை சுத்தமா கேக்கலையா...?

100அடி தூரத்துல இருந்து கூப்பிட்டா கேட் கலையா...? 10அடி தூரத்திலிருந்தா.... இப்படி...? அதை முதலில் தெரிந்து கொண்டு வா என்றார். அவனும் சரி என்று வீட்டுக்கு போனான். அவன் மனைவி கிச்சனில் ஏதோ சமையல் செய்து கொண்டிருந்தாள் இவன் வாசலுக்கு வெளியே நின்று கொண்டு தன் சோதனையை ஆரம்பித்தான்.

ஹே...ய்....மரகதம்...இன்னைக்கு என்ன டிபன் காலையில.., பதில் இல்லை. சரி கொஞ்சம் பக்கத்துல போய் கேட்ப்போம்ணு நெனைச்சிக்கிட்டு கிச்சனுக்கு வெளியில நின்னுக்கிட்டு அடியேய் மரகதம் இன்னைக்கு என்ன காலை டிபன்...? அப்பவும் wife ta இருந்து No responce....! என்னடா இதுன்னு நெனைச்சுக்கிட்டு மனைவி பக்கத்துல போய் நேருக்கு நேர் நின்னுக்கிட்டு ஏன் டார்லிங் நான் கேட்டது உன் காதுல விழலையா... இன்னைக்கு என்ன டிபன் செல்லம்...னு...? கேட்டு முடிக்கும் முன்பு அவன் கன்னத்தில் பளார்னு... ஒரு அறை விழுந்தது.. யோவ்.... நன்னாரிப்பயலே.... நீ மொதோவாட்டி கேட்டப்பயே இன்னைக்கு உப்புமா.. உப்புமா...னு... நாயா..கத்தறேன்.. உன் காதுல விழாம ஏன்யா ஏன் உயிர எடுக்குற..ன்னு.. உனது குறையை உணராமல் பிறரின் மேல் குறை உள்ளதாக எண்ணி அவர்களை மாற்ற முயல்கிறாய்.



# சவாலை எதிர்கொண்ட வைதேகி!

பொதுவாக நாட்டில் ஒரு கலவரம் நிகழும்போது அதையொட்டி உயிர்ச்சேதம், உடமைச் சேதம் ஏற்படுவது காலங்காலமாக இருந்து வருகின்ற வருத்தத்துக்குரிய செய்தியாகும். அப்படித்தான் இந்திராகாந்தி அம்மையார் இறந்தபோதும், பாபர் மசூதி இடிக்கப்பட்ட போதும், ராஜீவ் காந்தி இறந்தபோதும் மிகப்பெரிய கலவரம் ஏற்பட்டதை அனைவரும் அறிவோம். அப்படி பாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்திலிருந்து ஒரு பெண்மணி சென்னை வந்து எல்லா தடைகளையும் துயரங்களையும் தாண்டி சாதனை புரிந்திருக்கிறார். அவர்தான் வைதேகி ஸ்ரீதரன்.

பாபர் மசூதி இடிக்கப்பட்ட நேரத்தில் ஏற்பட்ட கலவரத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் வைதேகியின் குடும்பமும் ஒன்று. அந்த கலவரத்துக்குப் பின் அவர் குஜராத்தை விட்டு வெளியேறி சென்னையில் வந்து வாழ்க்கை நடத்தவேண்டிய சூழல் ஏற்பட்டது. கலவரத்தின் போது இவரது கணவர் ஸ்ரீதரின் உடல்நிலை பாதிக்கப்பட்டதால், கணவரால் எதுவும் செய்ய முடியாத நிலையில் குடும்பத்தின் மொத்த பாரத்தையும், மூன்று குழந்தைகளையும் சுமக்கின்ற பாரமும் சேர்ந்து வைதேகியை மேலே எழும்பவிடாமல் செய்தது.

சென்னை வந்த அவர் ஜெராக்ஸ் கடையில் வேலைப்பார்த்து கொஞ்சம் கொஞ்சமாக குடும்பத்தை முன்னுக்க கொண்டு வந்தார். அதன் பின்னர் ஓரளவுக்க குடும்ப சூழல் நார்மலாக மாறிய பிறகு அவர் தான் பட்ட கஷ்டங்களை மற்றவர்கள் படுவதற்கு முன்பாக அவர்களை அதிலிருந்து தம்மால் முடிந்தவரை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் உறுவாயிற்று அப்படி உருவானது டாக்டர் ஏ.பி.ஜே.கே. அப்துல்கலாம் டிரஸ்ட். இந்த டிரஸ்டில் உறுப்பினராகி தன்னால் தன்னுடைய சக்திக்கு உட்பட்டு என்னென்ன செய்ய முடியுமோ அவற்றை செய்திருக்கிறார். குறிப்பாக ஏழை குழந்தைகளுக்கு கல்விச் சூழலை திறம்பட உருவாக்கிக் கொடுப்பது. ஏழை பெண்களுக்கு வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில், அரசின் மூலம் அவர்களுக்கு கிடைக்க வேண்டிய உதவித்தொகை மானியம் ஆகியவற்றை அரசினிடமிருந்து பெற்றுத் தருவதென, தனது பணிகளை பிறருக்கு உதவுகின்ற வகையில் செய்து











வருகிறார். இதனால் இவர் அரசின் மூலம் விருதுகளும் பொது மக்களின் நன்மதிப் பையும் பெற்று வருகிறார். முன்னேறத்துடிக்கும் ஒவ்வொரு பெண்களுக்கும் குறிப்பாக ஆதரவற்ற நிலையில் இருக்கும் குடும்பத்தை காப்பாற்றும் பெண்களுக்கும் திருமதி வைதேகி ஸ்ரீதரன் ஒரு முன்னுதாரணமாகவும், முன்னோடியாகவும் எடுத்துக்கொண்டு பெண்கள் தங்கள் வாழ்க்கை முறையை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

முதன்மை செய்தியாளர் K.V. ஈஸ்வரி



# Yes, I am changing.

Recently a good friend of mine turned 60. I asked him what is changing. He sent me the following lines.

Days slip into weeks, Weeks turn into months and Months transform into years. Calendars are changing and so am I. Yes, I am changing.

After loving my parents, my siblings, my spouse, my children, my friends, now I have started loving myself.*

Yes, I am changing.

● I just realised that I am not "Atlas" & the world does not rest on my shoulders.Yes, I am changing.

*I now stopped bargaining with poor vegetables & fruits vendors. After all, a few rupees more is not going to burn a hole in my pocket but it might help the poor fellow save for his daughter's school fees.*

Yes, I am changing.

●I pay the autowalla / cabbie & walk away without waiting for the change. The extra money might bring a smile on his face. After all he is toiling much harder for a living than me.*

Yes, I am changing.

●I stopped telling the elderly that they have already narrated that story many times. After all, the story makes them walk down the memory lane and relive the past.*

Yes, I am changing.

●I have learn not to correct people even when I know they are wrong. After all, the onus of making everyone perfect is not on me. Peace is more precious than perfection.*

Yes, I am changing.

●I give compliments freely & generously. After all its a mood enhancer not only for the recipient, but also for me*.

Yes, I am changing.

●I have learnt not to bother about a crease on my shirt or a spot on my skirt. After all, personality speaks louder than appearances*.

Yes, I am changing.

●I walk away from people who don't value me. After all, they might not know my worth, but I do*.

Yes, I am changing.

●I remain cool when someone plays dirty politics to outrun me in the rat race. After all, I am not a rat and neither am I in any race*.

Yes, I am changing.

●I am learning not to be embarrassed by my emotions. After all, it's my emotions that make me human.*

Yes, I am changing.

●I have learnt that its better to drop the ego than to break a relationship. After all, my ego will keep me aloof whereas with relationships I will never be alone*.

Yes, I am changing.


●I demand for whatever is due to me. After all, accepting injustice is almost as bad as doing injustice*.

Yes, I am changing.

*I've learnt to live each day as if it were the last. After all, it might be the last* .

Yes, I am changing.

●I am doing what makes me happy. After all, I am responsible for my happiness, and I owe it to me.





# RUJUTA DIWEKAR
## ADVICE TO DIABETICS

Rujuta Diwekar* is the highest paid dietician in India. She is the one who took care of junior Ambani to lose 108 kgs. Her advice to diabetics:

●Eat fruits grown locally... Banana, Grapes, Chikoo, Mangoes. All fruits have FRUCTOSE so it doesn't matter that you are eating a mango over an Apple. A Mango comes from Konkan and Apple from Kashmir. So Mango is more local to you. Eat all the above fruits in DIABETES as the FRUCTOSE will eventually manage your SUGAR

●Choose Seed oils than Veggie oils. Like choose ground nut, mustard, coconut & til. Don't choose chakachak packing oils, like olive, rice bran etc Go for kachchi ghani oils than refined oils

●Rujuta spends max time in her talks talking about GHEE and its benefits.

Eat GHEE daily. How much GHEE we should eat depends on food. Few foods need more GHEE then eat more and vice versa. Eat ample GHEE. It REDUCES cholesterol.

●Include COCONUT Either scraped coconut over food like poha, khandvi or chutney with idli and dosa Coconut has ZERO CHOLESTEROL and it makes your WAIST SLIM

●Don't eat oats, cereals for breakfast. They are packaged food and we don't need them. Also they are tasteless and boring and our day shouldn't start with boring stuff. Breakfast should be poha, upma, idli, dosa, paratha

●Farhaan Akhtar's New ad of biscuits - fibre in every bite... Even ghar ka kachara has fibre, likewise oats have fibre. Don't chose them for fibre. Instead of oats, eat poha, upma, idli, dosa.

●No JUICES till you have teeth in your mouth to chew veggies and fruits SUGARCANE is the real DETOX. Drink the juice fresh or eat the SUGARCANE

●For pcos, thyroid - do strength training and weight training and avoid all packaged food

●RICE - eat regular WHITE RICE. NO NEED of Brown rice. Brown rice needs 5-6 whistles to cook and when it tires your pressure cooker, then why do you want to tire your tummy.

A .white rice is hand pounded simple rice Rice is not high is GI INDEX. Rice has mediun GI index and by eating it with daal / dahi / kadhi we bring its GI index further down If we take _ghee over this daal chawal then the GI INDEX is brought further down.

B. Rice has some rich minerals and you can eat it even three times a day

● How much should we eat - eat more if you are more hungry, let your stomach be your guide and vice versa

●We can eat rice and chapati together or only rice if you wish. It depends on your hunger. Eat RICE in ALL THREE MEALS without any fear.

● Food shouldn't make you scared like eating rice and ghee. Food should make you FEEL GOOD

●NEVER look at CALORIES Look at NUTRIENTS

●No bread, biscuits, cakes, pizza, pasta

● Ask yourself is this the food my Nani & Dadi ate? If yes then eat without fear.

● Eat as per your season. Eat pakoda, fafda, jalebi in monsoon. Your hunger is as per season. Few seasons we need fried food so eat them.


●When not to have chai - tea - don't drink tea as the first thing in morning or when you are hungry. Rest you can have it 2-3 times a day and with sugar

●NO GREEN tea please. No green, yellow, purple, blue tea. Eat ALL of your TRADITIONAL foods.

●Strictly NO to packaged foods / drinks.

●Exercise / Walk to digest & stay healthy.

**-G.Rammohan**



# அவர் தான் எம்.ஜி.ஆர்

காஞ்சி சங்கரமடத்தின் முன் அந்தக் கார் வந்து நிற்கிறது. காரிலிருந்து இறங்குபவர் அன்றைய முதல்வர் எம்,ஜி,ஆர்! எந்தவித முன் அறிவிப்பும் இல்லை? அவர் வருகிறார் என்ற செய்தியும் இல்லை? மடத்தைச் சேர்ந்தவர்கள் அங்கும் இங்குமாக அலை பாய்கிறார்கள். காரணம்? அன்றைய மடாதிபதியான மஹா பெரியவர் அந்த சமயம் மடத்தில் இல்லை! முதல்வர் என்றால் முறைப்படி பூரண கும்ப மரியாதை செலுத்தி வரவழைக்கவேண்டும்? மடத்தில் உள்ளவர்களின் மருட்சியைப் பார்த்து பொன் மனம் கேட்கிறார், “ஏன் இந்தப் பரபரப்பு?”அவரிடம் தயங்கிய படியே விபரம் சொல்லப்படுகிறது.

மகா பெரியவர் மூன்று கி மீ தூரத்தில் ஒரு குடிலில் தியானத்தில் இருக்கிறார். ”இவ்வளவு தானே? அங்கே போய் அவரை தரிசித்துக் கொள்கிறேன்”,* பதட்டமில்லாத பண் பட்ட வார்த்தைகளை உதிர்த்து விட்டு மீண்டும் காரில் ஏறிக் கொள் கிறார் மக்கள் திலகம்.மஹா பெரியவர் தங்கியிருந்த குடில் ஒரு குறுகிய சந்தில் இருந்ததால் காரி லிருந்து இறங்கி யவர் எந்தவித பந்தாவும் இல்லாமல் செல் கிறார் குடிலை நோக்கி.

முதல்வரை வரவேற்ற அந்த முதிர்ந்த கனி, உன்னை உட்கார சொல்ல ஒரு இருக்கை கூட இங்கில்லை. அதனால் என்ன? இங்கே இந்த மடத்துக்கு நீங்கள் தானே முதல்வர்! என்றபடி அவருக்கு எதிரே மண் தரையில் உட்காருகிறார் இதயக்கனி. இங்கே ஒரு விஷயம் சிலர் அறிந்திருக்க நியாயம் இல்லை, தன் மனதுக்கு மிகவும் பிரியப்பட்ட ஒரு சிலரைத்தான் மஹா பெரியவர் ஒருமையில் அழைப்பார்கள்! அந்த ஒரு சிலரில் எம்.ஜிஆரும் ஒருவர். ஆசி வழங்கிய பின் தன் ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார் அந்த அருள் ஞானி. “நம்ம மனுஷா முருகனோட அறுபடை வீடுகள் பழனி திருச்செந்தூர் திருத்தணி என்று ஒவ்வொன்றுக்கும் தனித் தனியா போகவேண் டியிருக்கு! அதுக்கு தேக சிரமம்கால விரயம், பணச் செலவுன்னு ஆகிறது. ஆறுபடைகளையும் ஒரே இடத்துல பிரதிஷ்டை பண்ணும்படியா உன் ராஜ்யத்துல ஒரு இடம் கொடுத்தாய் என்றால் ரொம்ப நன்றாக இருக்கும்“ இவ்வளவு தானே, இந்த விஷயத் துக்கா என்னைக் கூப்பிட் டிங்க?ஒரு ஃபோன் பண்ணி சொல்லியிருந்தா கூடப் போதுமே? நம் நெஞ்சமெனும் மடத்தில் இன்றும் தங்கற இந்த மடாதிபதி அந்த சங்கர மடாதி



பதியிடம் கனி வாகக் கேட்க, உன்னை நேரில் பார்க்க ணும்ன்னு ஆசை” என்று பதில் தருகிறார் எதிலும் ஆசை வைக்காத அந்த முனிவர்.

“நீ எங்கே எப்போ எத் தனை மணிக்குப் போனா லும் ஜனங்க உன்னைப் பார்க்க ஆசையோட சூழ்ந்துக்கறா.

அதனால தான் இந்த இடத்துக்கு உன்ன வரச் செஞ் சேன்! அங்கப் பாரு அதற்குள் உன்னைப் பார்க்க ஜனம் திரண்டுடுத்து. நீ கிளம்பு, என்று அன்புடன் விடை தருகிறார் அந்த ஆன்மிக அருங்கனி.இப்படியாக உருவானது தான் சென்னை பெஸன்ட் நகரில் உருவாகியுள்ள முருகன் அறுபடை வீடு கோயில்! எம்,ஜி,ஆர், அமெரிக்காவில் சிகிச்சை பெற்றபோது, யாராலும் விலைக்கு வாங்கப்பட முடியாத யாருக்கும் தனியாக பிரார்த்தனை செய்யும் பழக்கம் இல்லாத அந்தப் பெரியவர் எம்,ஜி,ஆர் ஒருவருக்காக மட்டுமே அவர் நலம் பெற வேண்டி பிரத்யேக பூஜை செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது!


## வாழ்த்துகிறோம்!





" எம்.ஜி.ஆர். தந்த நல்லாட்சியை நான் தருவேன்" என்று சபதமேற்று மக்களுக்குப் பணியாற்ற புறப்பட்டிருக்கும் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களின் நல்லாசியோடு தென் சென்னை மாவட்ட இணைச் செயலாளராக நியமிக்கப் பட்டுள்ள

**சினோரா பி.எஸ். அசோக்**

**(PRESIDENT, T.NAGAR SOCIAL CLUB)**

அவர்களுக்கு பாராட்டையும், வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கிறோம். திரு. அசோக் அவர்கள் மேற்கொள்ளும் பணிகளில் வெற்றி பெற மித்ரா டைம்ஸ் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

-ஆசிரியர்




# பெத்த மனம் பித்து



நெய்யின் சுகந்த மணம், மெதுவாக சமையலறையிலிருந்து வெளிவந்து, வீடு முழுவதும் பரவியது. அன்னபூரணி நெற்றியில் துளிர்த்த வியர்வையை, கைத்துண்டால் துடைத்தபடி, ஹாலில் வந்து அமர்ந் தாள். “என்ன பூரணி, பட்சணம் எல்லாம் தடபுடலா இருக்கு... வேலையை முடிச் சுட்டியா, இன்னும் ஏதாவது செய்யப் போறியா?’’ “எல்லாம் முடிஞ்ச மாதிரிதான்ங்க. இன்னும் தேன்குழல் மட்டும்தான் செய்ய வேண்டியிருக்கு; அதை முடிச்சுட்டா, அவ்வளவு தான்.’’

“எனக்கு ஒரு காபி தர முடியமா? மகனும், மருமகளும் வர்ற ஜோருல, என்னை மறந்துட்டியே...’’ கிண்டலாக கூறினார் சுப்ரமணிய குருக்கள். “என்னை கலாட்டா செய்யலைன்னா, உங்களுக்கு பொழுதே போகாதே!’’ சிறு முறு வலுடன் கூறியபடியே, காபி கலக்கச் சென்றாள் அன்னபூரணி.சுப்ரமணிய குருக்களுக்கு 52 வயது. சென்னை வானகரத்தில் உள்ள அம்மன் கோவில் அர்ச்சகர். அன்னபூரணிக்கு வயது 47. அவர்களின், ஒரே மகன் தான் பரத்வாஜ். கம்ப்யூட்டர் இன்ஜினியர் டெக்சாசில் வேலை பார்க்கிறான். லட்சக் கணக்கில் சம்பாதிக்கிறான்.

சிறு வயதிலேயே மிக சூட்டிகையானவன் பரத்வாஜ். குடும்பம் ஏழ்மை நிலையில் இருப்பது தெரிந்து, தான் நன்றாக படித்தால் தான் குடும்பம் முன்னேற முடியும் என்பதை உணர்ந்து,எப்போதும் பாட புத்தகமும் கையுமாக அலைவான். வகுப்பில் எப்போதும், அவன் தான் முதல் மாணவன். பிளஸ் 2வில், பள்ளி அளவில் முதல் மதிப்பெண்ணும், மாவட்ட அளவில் மூன்றாவது, இடத்திலும் வந்தான். இன்ஜினியரிங் கல்லூரியில் சேர்த்து விட்டாலும், அந்த நான்கு ஆண்டுகள் படிப்பு முடிவதற்குள், சுப்ரமணிய குருக்கள் மிகவும் திண்டாடி தான் போய் விட்டார்.பேங்க் லோன் கிடைத்திருந் தாலும், கல்லூரி கட்டணம் போக, மீதி செலவுகளான புத்தகம், உணவு, விடுதி கட்டணம் என மற்றவற்றுக் கெல்லாம், பல இடங்களில் கடன் வாங்கியும், இருந்த ஒரே ஓட்டு வீட்டையும் விற்றும் சமாளித்தார்.எப்படியோ ஒரு வழியாக நல்ல மதிப்பெண்ணுடன் பரத்வாஜ் இன்ஜினியரிங் முடித்தான்.அதற்குப் பின், சென்னையில் உள்ள, ஒரு பன்னாட்டு நிறுவனத்தில், “அப்ரென்டிஸ்’ ஆகசேர்ந்தான். இரண்டு வருட பயிற்சிக்குப்பின், பணி நிரந்தரம் செய்யப்பட்டு, நிறுவனத்தின் டெக்ஸாஸ் கிளைக்கு, பணி மாற்றம் செய்யப் பட்டான்.கண்காணாத இடத்திற்கு போய், மகன் சாப்பாட்டிற்கு கஷ்டப்படக்கூடாது.சிறு பிராயத்தில் சாப்பாட்டிற்கு கஷ்டப்பட்டது போதும். இனிமேல், அந்த நிலை வரக்கூடாது என்று. நினைத்த அன்னபூரணி, திருமணத்தை உடனே முடிக்க வேண்டும் என்று கூறிவிட்டாள். படிக்கும் காலத்தில், பரத்வாஜுக்கு பெரும்பாலும் ரசம் சாதம், தயிர்சாதம் தான். பல நேரங்களில் தொட்டுக் கொள்ள பொரியல் கூட இருக்காது. ஊறுகாயை தொட்டுக் கொண்டு சாப்பிடுவான். குருக்களும், அவர் மனைவியும், தாங்கள் சாப்பிடாமல் கூட இருந்து விடுவர்.ஆனால், மகனுக்கு எப்படியாவது, எதையாவது மூன்று வேளையும் சாப்பிடக் கொடுத்து விடுவர். பரத்வாஜூம், இதுதான் வேண்டும், அதுதான் வேண்டும் என்று, அடம்பிடிக்காமல் கிடைத்ததை

சாப்பிட்டு, படிப்பு ஒன்றையே, ஒரு தவம் மாதிரி மேற்கொண்டிருந்தான்.

பணி நிரந்தரம் செய்யப்பட்ட உடனே திருமணம் நடந்ததால், அதுவரை அவனுக்கு வந்திருந்த உதவிப் பணத்தில், வங்கியில் படிப்பு லோனுக்காக பெற்றிருந்த கடனை அடைத்துவிட்டு, மீதி சேர்த்து வைத்திருந்த பணத்திலிருந்து தான், திருமண செலவுகளை மேற்கொண்டனர்.

மருமகள் சிந்துஜாவும், ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவள்தான். அவள் அப்பா, ஒரு ஓட்டலில் சமையற்காரர். பிளஸ் 2 முடித்திருந்தாள். மேற்கொண்டு படிக்க வசதியில்லாததால், ஒரு சிறு நிறுவனத்தில் வேலைக்கு சென்று கொண்டிருந்தாள். அவளுக்கு பின், மூன்று தங்கைகள் படித்து கொண்டிருந்தனர்.சுப்ரமணிய குருக்களுக்கும், அன்னபூரணிக்கும் ஒரே எண்ணம் தான். ஒரு ஏழைக் குடும்பத்துப் பெண்ணைத்தான் மணம் முடிக்க வேண்டும் என்று. வரதட்சணை, நகை, சீர் எதுவும் கேட்காமல், இவர்களே திருமண செலவுகளை செய்து, திருமணத்தை முடித்தனர்.

திருமணமான ஒரே வாரத்தில், பரத்வாஜ், சிந்துவுடன் டெக்ஸாஸ் சென்று விட்டான்.

போன புதிதில், அவ்வப்போது போன் செய்து பேசிக் கொண்டிருந்த மகனும், மருமகளும், அதன் பின், மாதம் ஒரு முறை... இரண்டு மாதத்திற்கு ஒரு முறை என்று பேசலாயினர். டெக்ஸாஸ் சென்ற பின், பரத்வாஜ் ஒரு முறை கூட பணம் அனுப்பவில்லை. முதல் மாதம் சம்பளம் வாங்கியவுடன், “அப்பா, இங்கே இருக்குற லைப் ஸ்டைலுக்கேற்ற படி வீட்டுக்கு, பர்னிச்சர் வாங்கணும். இங்கு கார் இல்லாமல் இருக்கவே முடியாது. அதனாலே, ஒரு ரெண்டு மாதம் கழித்து பணம் அனுப்பறேன்...’ என்று கூறினான்.அதற்கு சுப்ரமணிய குருக்கள், “நீ அங்கே வேண்டியதை செய்துக்கப்பா. இங்கே எங்களுக்கு என்ன பணமுடை... நாங்க ரெண்டு பேர் தானே... நாங்க சமாளிச்சுக்குவோம்...’ என்று கூறிவிட்டார். அதற்குப் பின், பரத்வாஜிடமிருந்து பணம் பற்றி எந்தப் பேச்சும் வந்தது கிடையாது. சுப்ரமணிய குருக்களுக்கும், அன்னபூரணிக்கும், மகன் பணம் அனுப்பவில்லையே என்ற கவலையெல்லாம் இல்லை. அவன் நன்றாக இருந்தால், அதுவே போதும். பட்டினி அவர்களுக்கு பழக்கம் தானே!

இரண்டு ஆண்டுகளுக்குப் பின், மகன் இதோ இப்போது தான் சென்னை வருவதாக போன் செய்திருந்தான். அதற்கு தான் அன்னபூரணி தடபுடலாக பட்சணங்கள் எல்லாம் செய்து அமர்க்களப்படுத்தி கொண்டிருக்கிறாள்.

அன்னபூரணியிடம் மகன் போனில் பேசும் போதெல்லாம், “அம்மா இங்க சொர்க்கம் மாதிரி இருக்கும்மா. பெரிய வீடு, தோட்டம் எல்லாம் இருக்கு. வீடு பெருக்க, பாத்திரம் தேய்க்க, துணி துவைக்க எல்லாவற்றிருக்கும் மிஷின் இருக்கு. நீங்க ரெண்டு பேரும் இங்கேயே வந்து, எங்க கூடவே தங்கிடுங்கம்மா... அங்கே என்ன இருக்கு?’ என்று அடிக்கடி கூப்பிடுவான்.”அப்பா கோவிலை விட்டுட்டு வருவார்ன்னு தோணலைப்பா, நீ சென்னை வரும்போது, அது பற்றி பார்க்கலாம்...’ என்று கூறி வந்தாள் அன்னபூரணி.மகன் சொல்லிச் சொல்லியே அன்னபூரணிக்கு,

அந்த ஆசை அடி மனதில் தங்கி விட்டது. எப்போதும் சுப்ரமணிய குருக்களிடம் வாய் ஓயாமல் கூறத் தொடங்கி விட்டாள், ஒரு மாதமாவது அங்கே போய் அக்கடாவென்று இருந்து விட்டு வர வேண்டுமென்று. இப்போது மகன் வரும் தகவல் கிடைத்ததிலிருந்து அவளுக்கு கை, கால் ஓடவில்லை. எப்போது மகன் வந்து, தங்களை அவர்களுடன் கூட்டிப் போவான் என்றே மனதில் ஓடிக் கொண்டிருந்தது. பரத்வாஜ் வரும் அன்று, மீனம்பாக்கம் விமானநிலையம் சென்று, அவர்களை கூட்டி வர வேண்டும் என்று தான் அன்னபூரணிக்கு ஆசை.

ஆனால் பரத்வாஜ், “ அம்மா நீங்க சிரமப்பட வேண்டாம். கிளியரன்ஸ் முடிய நேரமாகும். அதனாலே, நாங்களே வந்துடறோம்...’ என்று கூறி விட்டதால், வீட்டுக்கு உள்ளேயும், வெளியேயும் குட்டி போட்ட பூனை மாதிரி நடந்து கொண்டிருந்தாள். காலையிலிருந்து சாப்பிடாமல் இருவரும் காத்திருக்க, ஒருவாறு மாலை மூன்று மணிக்கு வந்து சேர்ந்தனர் பரத்வாஜும், சிந்துவும்.

ரெடியாக வைத்திருந்த ஆரத்தியை சுற்றி, வீட்டுக்குள் அழைத்தாள் அன்னபூரணி.

இருவரும் ஏற்கனவே சிவந்த நிறமானாலும், இப்போது இன்னும் நன்கு சிவந்து, அழகாக இருந்தனர். பெருமை பிடிபடவில்லை அன்னபூரணிக்கு. சுப்ரமணிய குருக்கள், “”காலையில் இருந்து அம்மா சாப்பிடாம உங்களுக்காக தான் காத்திருக்காள். வாப்பா, ஒரு வாய் சாப்பிடலாம்.” “இல்லைப்பா, நாங்க சிந்து வீட்டுலியே சாப்பிட்டுட்டோம். அம்மா, உன் கையாலே, ஒரு வாய் காபி குடும்மா. அது போதும்.’’அப்போது தான், அவர்களுக்கு உறைத்தது, அவர்கள் இருவர் கையிலும் லக்கேஜ் எதுவும் இல்லாதது. சிந்து தன் கையில் வைத்திருந்த துணி பையை மாமியாரிடம் கொடுத்தாள். அதில் சில சாக்லேட் வகைகளும், ஒரு புடவை ஜாக்கெட், வேட்டி துண்டும் இருந்தது. அன்னபூரணிக்கு பசியில் மயக்கமே வரும் போலிருந்தது.

பார்த்து பார்த்து சமைத்து வைத்திருந்த அத்தனை உணவு வகைகளும் சீண்டுவாரற்று, அங்கே கிடந்தது.



காபி சாப்பிட்ட சிறிது நேரத்தில், “சரிப்பா நாங்க கிளம்பறோம். அங்கே சிந்து வீட்டுல தங்கிக்கிறோம். நான் அடிக்கடி வந்து பார்த்துக்கறேன். ஒரு மாசம் லீவு இருக்கு இல்ல,’’ கூறியவாறே கிளம்பி விட்டான் பரத்வாஜ். மறக்காமல், மாமியார் செய்து வைத்திருந்த பட்சணங்களை ஒன்று விடாமல் உரிமையுடன், “பேக்‘ செய்து கொண்டு கூடவே கிளம்பி விட்டாள் சிந்து. இவர்கள் இருவரும், அதை ருசி கூட பார்த்திருக்கவில்லை.

இருவருக்கும் மிகவும் வருத்தமாக இருந்தாலும், சுப்ரமணிய குருக்கள் வெளியில் எதையும் காண்பித்துக் கொள்ளவில்லை. அன்னபூரணி, அவர்கள் கிளம்பியவுடன் மனம் தாளாமல் புலம்பி தள்ளி விட்டாள்.”ஒரே பையன்னு ஆசையா வளர்த்தோம். இப்ப அவன் யாரோ மாதிரி வந்து அரைமணி நேரத்துல ஓடறான். எனக்கு மனசு சங்கடமா இருக்குங்க.”குருக்கள் தான் அவளை பலவாறு தேற்றி, சாப்பிடவைத்தார். இரண்டு நாட்கள் கழித்து, மறுபடியும் வந்த பரத்வாஜ், அப்பாவிடம் தனியாக பேசினான்.“அப்பா, சிந்துக்கு அவ அம்மாவை டெக்ஸாசுக்கு கூட்டிக் கிட்டு போய், ஒரு மாசம், கூட தங்க வைச்சுக்க ஆசைப்பா. அவ அம்மாவும் பாவம், சின்ன வயசிலிருந்து குடும்பம், குழந்தைகள்ன்னு உழைச்சு ஓடாயிட்டா. அதனால, அவங்களை நாங்க இப்ப கூட்டிக்கிட்டு போகப் போறோம்.நீங்க எல்லாத்தையும் சரியா புரிஞ்சிப்பீங்க. அதனால தான், உங்ககிட்ட சொல்றேன்.அம்மாவுக்கு எப்படியாவது சொல்லி புரிய வைக்கறது உங்க பொறுப்புப்பா.“அப்புறம்... சிந்துவிற்கு தனி குடித்தனமா இருக்கிறது தான் பிடிச்சிருக்குப்பா.

நீங்களும், அம்மாவும் அங்கே சாஸ்வதமா இருக்க முடியாதுப்பா. அவ பிரைவசியை விரும்புறா.

அம்மாவுக்கும், அவளுக்கும் ஒத்துப் போகாதுப்பா. நீங்க அங்கே வந்தா, அவ உங்களை உதாசீனப்படுத்திடுவாளோன்னு எனக்கு பயமா இருக்குப்பா. அதனால, நீங்க போன் கூட செய்யாதீங்க. நானே, அப்பப்ப சமயம் கிடைக்கும் போது, உங்களுக்கு போன் செய்றேன்.” அத்தோடு டெக்ஸாசுக்கு கிளம்பும் அன்று தான் இருவரும் வந்து ஐந்து நிமிடம் இருந்து, விடை பெற்றுக் கிளம்பினர்.அன்று இரவு, “”என்னங்க நான் உங்களுக்கு வாழ்க்கைப்பட்டு வந்ததிலிருந்து, எதுக்கும் ஆசைப்பட்டதில்லை.ஆனால், நம்ம பையன் வெளிநாட்டுக்கு போனதுக்கு அப்புறம், ஒரு மாசமாவது அங்கே போய் இருக்கணும்ன்னு ஆசைப்பட்டேன்.

அது நிராசையா யிடுச்சு சரி, வாங்க தூங்கலாம். நீங்க நாலு மணிக்கு எழுந்து குளிச்சு கோவிலுக்கு போகணும்.” இரண்டு மாதங்கள் உருண்டோடிய பின், டெக்ஸாசில் ஒரு நாள்...

“என்னங்க... டாக்டர் நான் மாசமா இருக்கறதை உறுதி செய்திட்டாரு; எனக்கு விதம் விதமா சாப்பிடணும்ன்னு ரொம்ப ஆசையா இருக்குங்க. எங்க அம்மா, “நான் இப்பத்தான், ஒரு மாசம் உங்க கூட இருந்தேன் மறுபடியும் அப்பாவையும், தங்கைகளையும் விட்டுட்டு வர முடியாதுன் னுட்டாங்க. எனக்கு சாதாரணமான தினப்படி சமையல் தான் தெரியும். இப்ப என்னங்க செய்யறது?’’ “நாம வேண்டுமானால், ஒரு சமையல்காரியை வேலைக்கு அமர்த்திக்கலாம்?’’ “இங்கே அப்படியெல்லாம் சமையலுக்கு ஆள் கிடைக்க மாட்டாங்களே.” “அப்ப என்ன தான் செய்யறது?” “பேசாம உங்க அம்மாவை வரவழைச்சா என்னங்க? பிரசவம் முடியற வரை, இங்கேயே இருந்து, எனக்கு வேண்டியதை சமைச்சு போடட்டுமே.’’ “அப்பா ஒரு மாசம் வரை வேண்டுமானால், கோவிலை பார்த்துக்க வேறு ஆளை ஏற்பாடு செய்துட்டு வருவார். ஆனால்...” அதுக்கு மேல முடிக்க விடவில்லை சிந்துஜா. “அவர் எதுக்கு இங்கே வரணும்? உங்க அம்மா மட்டும் வந்தா போதும்.’’ “நீ தானே நமக்கு பிரைவசி தேவை, அவங்க... இங்கே வந்தா சரிப்படாதுன்னு சொன்னே. இப்பக் கூப்பிட்டா எப்படி வருவாங்க?”

“அதெல்லாம், இங்க வறதுக்கு உங்க அம்மாவுக்கு ரொம்ப ஆசை. சாப்பாட்டுக்கே லாட்டரி அடிக்கிறவங்க தானே? இங்க வந்தா, மூன்று வேளையும் நல்லா சாப்பிடலாமே. நீங்க போன் செய்யுங்க சொல்றேன்.’’ சிந்துஜா பேசுவது ஒன்றுமே பிடிக்கவில்லை பரத்வாஜ்க்கு, “”சரி, நல்ல சேதியை டாக்டர் சொல்லியிருக்காரு. புதுசா கட்டப்பட்ட அம்மன் கோவிலுக்கு போன வாரம் கும்பாபிஷேகம் நடந்தது இல்ல... அங்க போய் சாமி கும்பிட்டுட்டு வரலாம். வந்து மீதியை பார்த்துக்கலாம்.’’ இவர்கள் போன போது சற்றுக் கூட்டமாக இருந்தது. அப்போது தான் அம்மனுக்கு அலங்காரம் முடித்து, திரை விலகி தீபாராதனை காட்டப்பட்டது. கண்களை மூடி கை குவித்து இறைவனை வணங்கி, கண்களை திறந்தால், தீபாராதனை தட்டுடன் அருகில் வந்த குருக்களைப் பார்த்து, அதிர்ந்தான் பரத்வாஜ். அங்கே நிற்பது யார்? அப்பாவா? கண்களை கசக்கி விட்டுக் கொண்டு மீண்டும் பார்த்தான். “அப்பா...’ அவனை அறியாமல் வாய் முணுமுணுத்தது.

“கொஞ்சம் இருப்பா. இதோ வரேன்.’’ அங்கிருந்த வேறொரு குருக்களிடம் ஏதோ சொல்லி விட்டு வந்த அப்பா, “”அதோ, அது தான் நம்ம குவார்ட்டர்ஸ் வாங்க, போகலாம்,” குருக்கள் முன்னே நடக்க, பேச்சற்று பின் தொடர்ந்தனர்

இருவரும். வீட்டில் இவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்ற அன்னபூரணி, “”சென்னையில் அப்பா வேலை பார்த்த கோவில் தர்மகர்த்தாவின் பொண்ணும், மாப்பிள்ளையும் இங்கே தான் இருக்காங்க. அவர்கள் கட்டிய கோவிலுக்கு, பூஜை விதிமுறைகள் தெரிஞ்ச தலைமை குருக்கள் வேணும்ன்னு, அப்பா கிட்ட கேட்டுகிட்டாங்க. தர்மகர்த்தாவும், “நீங்க டெக்ஸாசுக்கு கிளம்புங்க. நான், இங்கே வேறு ஆளை பார்த்துக்கறேன்’னு சொல்லிட்டார்.

“அப்பாவும் சென்னையில நமக்கு யாரிருக்கா... தெய்வ கைங்கரியத்தை எங்கேயிருந்து செய்தா என்னன்னு புறப்பட சொல்லிட்டார். இங்கே அப்பாவுக்கு மாத சம்பளம், ஒரு லட்சம் ரூபாய்,’’ கட கடவென கூறி முடித்தாள் அன்னபூரணி.”

அம்மா, இப்ப உங்க மருமகள் தாய்மை அடைஞ்சிருக்கா. அவளுக்கு வாய்க்கு ருசியா சாப்பிடணும்ன்னு தோணுதாம்; அவ அம்மா, இப்ப வர முடியாத சூழ்நிலை. நீங்க ரெண்டு பேரும் எங்க கூட பிரசவம் வரை இருந்தா நல்லாயிருக்கும்மா.’’ “அது சாத்தியப்படாதுப்பா, அப்பா பூஜை முடிச்ச மீதி நேரத்துல, இங்கே இருக்கிற வேத பாடசாலையில் வேதம் சொல்லிக் கொடுக்கிறார். அதுக்கு இங்கே இருக்கிறது தான் சவுகரியம்.’’ “அம்மா... அப்பா வரமுடியலைன்னா பரவாயில்லை. நீ மட்டுமாவது வாம்மா.”

“இல்லைப்பா அப்பாவுக்கும் வயசாகிறது. அவரை பார்த்துக்கறது தான், என் முதல் கடமை.

அது மட்டுமில்லாம, தினமும் கோவில் பிரசாதங்களை செய்கிற வேலையும் எனக்கு கொடுத்திருக்காங்க. வேதம் கத்துக்கறவங்களுக்கும், கடவுளை தரிசிக்க வர்றவங்களுக்கும், மதிய உணவு செய்யும் பொறுப்பும் எனக்கு இருக்கு. இதுக்காக எனக்கு ஐம்பதாயிரம் ரூபாய் மாத சம்பளம் தர்றாங்க. வேண்டுமானால் நீங்க ரெண்டு பேரும் இங்கே தங்கிக்குங்க. நான் வேண்டியதை சமைச்சுப் போடுறேன்.”

“இல்லைம்மா. இங்கே குவார்ட்டர்ஸ் சின்னதா இருக்கு,’’ என்று இழுத்தான் பரத்வாஜ். “ஓ... ஆமாம் உங்களுக்கு இங்கே பிரைவசி இருக்காது இல்ல... அதை நான் மறந்துட்டேன். சரிப்பா நான் தினமும், அவ விருப்பப்படறத சமைச்சு தர்றேன்.

நீ வந்து வாங்கிகிட்டு போ.’’ “இல்லைம்மா. என் ஆபீஸ் ஒரு கோடியிலன்னா, வீடு இன்னொரு கோடியில, நீங்க இருக்கறது மற்றொரு பக்கம். தினமும் வர முடியாதும்மா. அது கஷ்டம்.’’ “பரத்வாஜ், இவ்வளவு நாள் உனக்காகவே நாங்க ரெண்டு பேரும் வாழ்ந்தோம், பசியும் பட்டினியுமா இருந்து, உன்னை ஆளாக்கி, நல்ல நிலைமைக்கு கொண்டு வந்தோம்.

ஆனால், கல்யாணம் ஆனவுடன் உனக்கு நாங்க தேவையற்று போயிட்டோம். “கலங்கி நின்ன எங்களுக்கு தொப்புள் கொடி உறவு போனா என்ன, வேற புதிய உறவுகளை ஏற்படுத்தி தர்ரேன்னு, கடவுள் புதிய பந்தங்களை ஏற்படுத்திக் கொடுத் திருக்கிறார்.

இனிமேல், அந்த பந்தங்களை எங்களால விட முடியாது. “ஆனா... உனக்கு எப்ப இங்கே வரணும்ன்னு தோணினாலும், நீங்க ரெண்டு பேரும் வரலாம். எங்களால முடிஞ்சத செய்றோம். இப்ப மதிய உணவு நேரம் நெருங்கிடுச்சு. நான் போய் பரிமாறணும். “உங்களுக்கு எது வசதியோ, அது மாதிரி முடிவெடுங்க.

சாப்பாடு எல்லாம் இருக்கு; எடுத்துப் போட்டு சாப்பிடுங்க; நான் அரை மணி நேரம் கழித்து திரும்பி வருவேன்,’’ என்று கூறி அரக்க பறக்க கிளம்பினாள் அன்னபூரணி.

பெற்றவர்களின் அன்பை உணர முடியாமல், மனைவியின் சுயநல போக்கிற்கு அடிமையாகி, அவர்களை உதாசீனப்படுத்தி இப்போது, அதே அன்பிற்கு ஏங்கிய பரத்வாஜ், சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்த அப்பாவின் முகத்தை ஏறெடுத்தும் பார்க்க கூசி, அங்கிருந்து தன் மனைவியுடன், தளர்ந்த நடையுடன் வெளியேறினான்.





# பலன் தரும் பனங் கற்கண்டு

## மருத்துவ குறிப்புகள்





பனங்கற்கண்டு சாப்பிட்டா இந்த பிரச்சனையெல்லாம் பறந்து போய்விடுமாம்!

பனங்கற்கண்டு இந்தியாவில் பயன்படுத்தப்படும் மருத்துவக் குணம் வாய்ந்த பொருளாகும். இது மிஸ்ரி என்றும் அழைக்கப்படுகிறது. ஆங்கிலத்தில் இதை ராக் கேண்டி என்பர். இது நிறைய சர்க்கரை படிகக் கற்கள் சேர்ந்து உருவான அமைப்பாகும்.

இது ஒரு சுத்திகரிக்கப்படாத அல்லது தூய்மைப் படுத்தப்படாத சர்க்கரை ஆகும். கரும்பு மற்றும் பனை மரத்திலிருந்து இது தயாரிக்கப் படுகிறது. எனவே தான் இதை கற்கண்டு என்றும் பனங்கற்கண்டு என்றும் அழைக்கின் றனர்.சுத்திகரிக்கப்பட்ட சர்க்கரை மிகுந்த இனிப்பு சுவையுடன் இருக்கும். ஆனால் பனங்கற்கண்டில் குறைந்த அளவு இனிப்பு சுவை இருப்பதால் நமது உடலுக்கு மிகவும் பாதுகாப்பானது. நமக்கு ஏற்படும் சின்ன சின்ன உடல் உபாதைகளுக்கு இதை வீட்டில் பயன்படுத்துவர். இதில் விட்டமின்கள், தாதுக்கள் மற்றும் அமினோ அமிலங்கள் உள்ளன. இதில் உள்ள சத்துக்கள் உங்களுக்கு ஏற்படும் ஆஸ்துமா, அனிமியா, மூச்சுப் பிரச்சினை, இருமல், சளி, இரத்த அழுத்தம் மற்றும் சிறுநீரக பிரச்சினை போன்றவற்றிற்கு பயன்படுகிறது. சரி வாங்க இனி இதை பயன்படுத்துவதால் என்னென்ன அற்புதங்கள் கிடைக்கும் என்பதை பார்ப்போம்.

*1 :* அந்த காலத்தில் வாழ்ந்த நம் முன்னோர்கள் இந்த பனங்கற்கண்டை சளி மற்றும் இருமலுக்கு பயன்படுத்தினர். மேலும் இது தொண்டைக் கரகரப்பு, சளியை வெளியேற்றுதல் மற்றும் இருமல் குறைதல் போன்றவற்றை செய்கிறது. இதற்கு இதை நீங்கள் வாயில் போட்டு அந்த உமிழ் நீரை முழுங்கினால் போதும்.

*2:*உங்கள் வாய் துர்நாற்றம் வீசுகிறதா? கொஞ்சம் சீரகம் மற்றும் பனங்கற்கண்டை வாயில் போட்டு மென்று தின்றால் போதும் உங்கள் வாய் துர்நாற்றம் காணாமல் போகும்.

*3:* உங்களுக்கு எப்பொழுதும் சோர்வாக இருப்பது மாதிரி தோன்றுகிறதா? அதற்கு 1/2 டேபிள் ஸ்பூன் பசு மாட்டு நெய்யுடன் சிறிது பனங்கற்கண்டு மற்றும் சிறிது நிலக்கடலை சேர்த்து சாப்பிட்டால் போதும் மிகவும் சுறுசுறுப்பாக மாறிவிடுவீர்கள்.


*4:* தீராத சளி பிரச்சினை இருந்தால் அதற்கு 2 பாதாம் பருப்பு, 1 டேபிள் ஸ்பூன் பனங்கற்கண்டு, 1/2 டேபிள் ஸ்பூன் மிளகுத் தூள் பொடி சேர்த்து மிக்ஸியில் போட்டு பொடி பண்ணி பாலுடன் கலந்து குடித்தால் போதும் உங்கள் சளி பிரச்சினை காணாமல் போகும்.

*5:* தொண்டைக் கட்டிக் கொண்டு பேச முடியாமல் கஷ்டப்படுகிறீர்களா? 1/2 டேபிள் ஸ்பூன் மிளகுத்தூள், 1/2 டேபிள் ஸ்பூன் நெய் மற்றும் 1/2 டேபிள் ஸ்பூன் பனங்கற்கண்டு சேர்த்து சாப்பிட்டால் தொண்டை வலி குணமாகும்.

*6:* சிறிது பனங்கற்கண்டு, பாதாம் பருப்பு மற்றும் சீரகம் சேர்த்து இரவில் படுப்பதற்கு முன் சாப்பிட்டு வந்தால் உங்கள் நினைவாற்றல் அதிகரிக்கும். மேலும் கண்பார்வை அதிகரிக்கும்.

*7 :* உங்களின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க இந்த பனங்கற்கண்டை பாதாம் மற்றும் மிளகுத் தூளுடன் சேர்த்து வாரத்திற்கு 2 முறை சாப்பிட்டால் போதும் உங்களை எந்த நோயும் அண்டாது.

*8 :* 2டேபிள் ஸ்பூன் வெங்காய ஜூஸ் மற்றும் 1 டேபிள் ஸ்பூன் பனங்கற்கண்டு சேர்த்து வாரத்திற்கு ஒரு முறை சாப்பிட்டால் சிறுநீரகக் கற்கள் பிரச்சினை சரியாகும். இன்னும் ஏன் வெயிட் பண்ணுரிங்க இப்போதே இந்த மருத்துவ குணம் வாய்ந்த கற்கண்டை பயன்படுத்தி உங்கள் உடல் உபாதைகளிலிருந்து விடுபடுங்கள்.





# சவாலை வென்ற சரவணமுத்து



முதியவர்கள், உடல்நலமில்லாதவர்களின் முக்கிய பிரச்னை படுக்கையிலேயே இயற்கை உபாதைகளைக் கழிப்பது. என்னதான் பிள்ளைகளானாலும், உடன் பிறப்பானாலும், மனைவியானாலும், தாயானாலும், அவர்கள் முகம் சுழிக்காமல் பார்த்துக்கொண்டாலும், படுக்கையிலேயே இயற்கை அழைப்புகளை கவனித்து அதை சுத்தம் செய்வது என்பது கவனித்துக்கொள்பவருக்கு மட்டுமல்ல, படுக்கையில் இருப்பவருக்கும் சங்கடமான விஷயம்.

இதற்கு தீர்வாக தென்காசியைச் சேர்ந்த வெல்டர் சரவணமுத்து கழிப்பறை கட்டில் ஒன்றை உருவாக்கி உள்ளார்! இதை யாருடைய உதவியுமின்றி படுக்கையில் இருப்பவரே பயன்படுத்தலாம். மட்டுமல்ல. தண்ணீர் குழாய்களுடன் இணைக்கப்பட்டுள்ள இந்தக் கட்டிலில் படுத்த நிலையிலேயே சுத்தமும் செய்து கொள்ளலாம்.

"பிறந்தது, வளர்ந்தது எல்லாம் தென்காசிலதான். அப்பா சண்முகம், ஆட்டோ மெக்கானிக். நானும் காருக்கெல்லாம் டிங்கரிங் பார்த்திருக்கேன். படிச்சது மூணாவது வரைதான். அதுக்காக இப்படியே காலத்தை ஓட்டிடலாம்னு நினைக்கலை. சொந்தமா ஏதாவது செய்யணும்னு நினைச்சேன். அப்படி ஆரம்பிச்சதுதான் வெல்டிங்.

இன்ஜினியரிங் படிக்கிற பசங்க புராஜெக்ட் செய்யணும்னு வருவாங்க. அவங்க ஐடியாக்களுக்கு தகுந்தா மாதிரி எலெக்ட்ரிக் வேலைகள் செய்து கொடுப்பேன். அப்படி செஞ்சதுல நிறைய பரிசுகள் வாங்கியிருக்கு. 'இதே மாதிரி நாம பரிசு வாங்க முடியாதா'னு நண்பர்கள்கிட்ட கேட்டேன். 'உனக்கு படிப்பறிவே இல்லை.

உனக்கெதுக்கு இந்த ஆசை'னு கிண்டல் செஞ்சாங்க..." என்று சிரிக்கும் சரவணமுத்து அந்த கிண்டலையே சவாலாக ஏற்றிருக்கிறார். "இந்த நேரத்துல என் மனைவி யூட்ரெஸ் ஆபரேஷன் செஞ்சு 20 நாள்கள் படுக்கைலயே இருந்தாங்க. என் மாமியார்தான் அவங்களை பார்த்துகிட்டாங்க. அப்ப இரண்டு பேருமே கஷ்டமும் வருத்தமும் பட்டதை கண்ணால பார்த்தேன்.

அப்பதான் வயசானவங்களும், உடல்நிலை சரியில்லாதவங்களும் எந்தளவுக்கு சங்கடத்தை அனுபவிப்பாங்கனு தோணுச்சு. இதுக்கு நம்மால ஏதாவது செய்ய முடியுமான்னு யோசிச்சு உருவாக்கினது தான் இந்தக் கழிப்பறை கட்டில். என்கிட்ட இருந்த பொருட்களை வைச்சு இதை உருவாக்கினேன். இதைப் பார்த்துட்டு சென்னையைச் சேர்ந்த குருமூர்த்தி, தன் அம்மாவுக்காக இன்னும் கொஞ்சம் வசதி களோட செய்து தரச் சொன்னார். அதுமாதிரியே செஞ்சு முடிச்சதும் நம்பிக்கை வந்தது.

இது பார்க்க சாதாரண கட்டில் மாதிரிதான் இருக்கும். ஒரு சின்ன ஸ்விட்ச் போர்டு இணைச்சிருப்பேன். அதுல டவுன் பட்டனை அழுத்தினா கட்டிலுக்கு நடுவுல கழிப்பறை வடிவ கதவு திறக்கும். அதுலயே குழாய்கள் இணைச்சிருப்பேன். ஃபோர்ஸா தண்ணீரும் வரும். பயன்படுத்திட்டு க்ளோஸ் பட்டனை அழுத்தினா நேரடியா கழிவுகள் கழிப்பறைக்கு போயிடும்.

டியூப்பை மட்டும் எங்க, எப்படின்னு நாம சரியா பொருத்திக்கணும். ஸ்விட்ச் பாக்ஸ் கூட மூணு மீட்டர் நீளம் உடையதா, கட்டில சுத்தி எங்க வேணும்னாலும் கொண்டு போற மாதிரி இருக்கும். அதுல ஒரு சின்ன ஷவர் கூட இருக்கு. பயன்படுத்திட்டு சுத்தமும் செய்துக்கலாம். இந்தக் கட்டில் மட்டும் இல்ல;

கரண்ட் போனாலும் எழுதற மாதிரி லைட் பேனா, சாக்கடை சுத்தம் செய்யற மக்களுக்காக காற்ற சுத்தம் செய்து ஃபில்டர் பண்ணி சுவாசிக்கக் கூடிய மாஸ்க்... இதையெல்லாம் செய்திருக்கேன். இந்த மாஸ்க்கை வண்டில போறவங்க கூட பயன்படுத்தலாம். தேங்காய் உரிக்க, துருவ... இப்படி எல்லாத்துக்கும் மெஷின் செய்திருக்கேன்.

ஆனா, எங்க, எப்படி பதிவு செய்து பேடன்ட் ரைட்ஸ் வாங்கணும்னு தெரியாததால எல்லாமே மாடல் அளவுலதான் இருக்கு. வேற சில ஐடியா கூட இருக்கு. என்ன பயன்? வசதி இல்லை. உதவி கிடைச்சா நல்லா இருக்கும்..." ஏக்கமாகச் சொல்கிறார் இந்த படிக்காத மேதை.



# சினிமா டைம்ஸ்



## நடிப்புக்கு ஸ்ரேயா முழுக்கு

ரஜினி, விஜய் போன்ற முன்னணி நடிகர்களுடன் நடித்தவர் ஸ்ரேயா. முன்னணி ஹீரோயின்கள் ரேஸில் ஓடிக்கொண்டிருந்தவருக்கு திடீரென்று சுணக்கம் ஏற்பட்டது. மார்க்கெட் டல்லடித்து வாய்ப்புக்காக காத்திருக்க வேண்டிய நிலை உண்டானது. கடந்த 3 வருடமாகவே அவரை கோலிவுட் பக்கம் அடிக்கடி காண முடியவில்லை. அப்படியே நடித்தாலும் கெஸ்ட் ரோல், தோல்வி படம் என்ற அளவில்தான் பேசப்பட்டு வந்தார். பொறுமையாக காத்திருந்த ஸ்ரேயாவுக்கு திடீர் வாய்ப்பாக அரவிந்த்சாமியுடன், 'நரகாசூரன்' படத்தில் நடிக்க வாய்ப்பு கிடைத்தது இப்படமும் பிரச்சனையில் உள்ளது. 35 வயதாகிவிட்ட ஸ்ரேயாவுக்கு திருமணம் செய்துவைக்க குடும்பத்தினர் எண்ணினர்.

அதற்கு சம்மதிக்காமலிருந்தவர் திடீரென்று தனக்கு ரஷ்ய காதலன் இருப்பதாக தகவல்களை கசிய விட்டார். கடந்த மாதம் ரகசியமாக காதலன் ஆண்ட்ரேவ் கோஷ்சேவ்வை ரகசிய திருமணம் செய்துகொண்டார். இல்லறத்தில் மூழ்கிவிட்ட ஸ்ரேயா தற்போது நடிப்பிலிருந்து விலகி இருக்க முடிவு செய்திருக்கிறார். காதலனுடன் ரஷ்யா சென்று வாழ முடிவெடுத்திருக்கும் அவர் தெலுங்கில் வெங்கடேஷுடன் நடிக்க ஒப்புக்கொண்ட படத்திலிருந்து விலகி இருப்பதாக கூறப்படுகிறது. பட வாய்ப்பு இல்லாத நிலை தொடரும் பட்சத்தில் அவர் நடிப்புக்கு முழுக்கு போடுவார் என்றும் தெரிகிறது.



## வில்லனுக்கு ஜோடி: ஸ்ருதிஹாசன்

தமிழில் அஜீத்துடன் பில்லா 2, விஜய்யுடன் துப்பாக்கி ஆகிய படங்களில் வில்லனாக நடித்துள்ள வித்யுத் ஜம்வால், கதாநாயகனாக நடிக்கும் படத்தில் ஸ்ருதிஹாசன் அவருக்கு ஜோடியாக நடிக்கிறார் இந்திப் படத்தில் வில்லனாக நடித்திருக்கிறார். எனினும், இப்போதுதான் அவர்கள் முதல்முறையாக ஜோடி சேருகின்றனர்.



## விஜய் சேதுபதி சாயிஷா வெற்றி தொடருமா?

தமிழ் சினிமாவின் முன்னணி நாயகனாக வலம் வரும் விஜய் சேதுபதியின் நடிப்பில் உருவாகி வரும் படம் ஜூங்கா. கோகுல் இயக்கும் இந்த படத்தில் விஜய் சேதுபதிக்கு ஜோடியாக வனமகன் படத்தில் நடித்த சாயிஷா சைகல் நடித்து வருகிறார். இந்நிலையில் மற்றொரு கதாநாயகியாக மடோனா செபாஸ்டியன் நடித்து வருகிறார். மற்ற படங்களை போலவே இந்த ஜோடி இந்த படத்திலும் ஹாட்ரிக் ஹிட் அடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் படத்தை விஜய் சேதுபதியே தயாரிப்பது குறிப்பிடத்தக்கது. காமெடியனாக யோகிபாபு நடிக்கிறார். சித்தார்த் விபின் இப்படத்திற்கு இசையமைக்கிறார். மடோனா செபாஸ்டியன் ஏற்கனவே விஜய் சேதுபதியுடன் காதலும் கடந்து போகும், கவண் உள்ளிட்ட படங்களில் நடித்திருக்கும் நிலையில், மூன்றாவது முறையாக ஜூங்கா படத்தில் இணைந்துள்ளார்.



## கண்டிஷன் போட்ட சிவகார்த்திகேயன்

முன்பெல்லாம் டாஸ்மாக் மது கடை காட்சியில் நடிப்பதை ஒரு ஜாலியாக நினைத்தேன். இப்போது அதன் கொடிய தாக்கம் எனக்கு புரிந்திருக்கிறது. இனி என் படத்தில் டாஸ்மாக் காட்சி இருக்காது. மேலும் பெண்களை கிண்டல் செய்யும் வகையிலான காட்சிகளும் இருக்காது' என்ற சிவகார்த்திகேயன் அப்படிப்பட்ட படங்களில் நடிக்க மாட்டேன் என்றும்.

அந்த மாதிரியான காட்சிகளை வைக்க கூடாது என்றும் கண்டிஷன் போடுகிறாராம் சிவகார்த்திகேயன்.



## கவர்ச்சியாக நடிக்க ரெடி: சமந்தா அதிரடி



சமந்தா, நாக சைதன்யா காதல் ஜோடி, திருமணத்துக்கு பிறகு இணைபிரியா தம்பதிகளாக வாழ்ந்து வருகின்றனர். அதேசமயம் இருவரும் நடிப்பில் கவனம் செலுத்துகின்றனர். சமந்தா தொடர்ந்து நடிக்க சைதன்யாவோ அவரது குடும்பத்தினரோ தடை விதிக்கவில்லை. திருமணத்துக்கு முன்பு கிளாமர் ஹீரோயின் வேடங்களில் நடித்ததுபோல் இப்போதும் அதுபோன்ற வேடங்களை ஏற்கிறார். அதேசமயம் நடிப்புக்கு முக்கியத்துவம் உள்ள கிளாமர் குறைந்த கதாபாத்திரங்களிலும் நடிக்கிறார்.

இதுபற்றி சமந்தா கூறியது: கமர்ஷியல் மசாலா படங்களில் கிளாமர் ஹீரோயினாக நடித்துவந்த நான் திடீரென்று அதிலிருந்து விலக விரும்பவில்லை. அது எனது நடிப்பு தொழிலை பாதிக்கும். அதை நான் உணர்ந்திருக்கிறேன். கிளாமர் ஹீரோயினாக எல்லா நடிகைகளுக்கும் ரசிகர்களின் அங்கீகாரம் கிடைத்துவிடுவதில்லை. ஒரு சிலருக்கு மட்டுமே கிடைக்கிறது. அதை இழக்கவிரும்பவில்லை. கிளாமர் வேடங்களில் நடிக்க நான் வெட்கப்பட்டு ஒதுங்க மாட்டேன்.

அதேசமயம் அதில் மாறுபட்ட நடிப்பு இருக்கும்படி பார்த்துக்கொள்வேன்' என்றார். சமந்தா தற்போது தெலுங்கில் நடித்துள்ள 'ரங்கஸ்தலம்' படத்தில் கிராமத்து பெண்ணாக பாவாடை, தாவணி அணிந்து நடித்திருக்கிறார். அதற்கு ஏக வரவேற்பு கிடைத்திருப்பதால் தொடர்ந்து அதேபோன்ற வேடங்களில் நடிப்பார் என்ற பேச்சு எழுந்தது. அதற்கு பதில் அளிக்கும் விதமாகவே கிளாமர் ஹீரோயினாக தொடர்ந்து நடிப்பேன் என அவர் தெரிவித்திக்கிறார்.


பிரியா வாரியர்

## கண்ணியமாக நடிப்பேன்: கண் சிமிட்டல் நடிகை!

ஒரு அடார் லவ் என்ற மலையாள படத்தில் நடித்து வரும் நடிகை பிரியா வாரியர் தனது கண் சிமிட்டலால் இந்தியா முழுவதும் பிரபலமானார். இந்த படம் இன்னும் திரைக்கு வராத நிலையில் அவர் ஓவர் பில்டப் செய்து வருவதாக கூறப்படுகிறது. சமீபத்தில் அவர் அளித்த பேட்டியில் சினிமாவில் பெரிய நடிகையாக வேண்டும் என்றும், நல்ல நடிகை என்று பெயர் எடுக்க வேண்டும் என்பது தான் தனது லட்சியம் என்று கூறினார்.



# இது தான் உலகம்

மிதிபட்ட எறும்பிற்கு இரண்டுமே ஒன்றுதான்...!! நினைப்பது போல் வாழ்க்கை எல்லோருக்கும் அமைந்து விடுவதில்லை அழகாய் அமைந்த வாழ்க் கையைக் கூட சிலருக்கு வாழத் தெரிவதும் இல்லை..! 'சந்தோஷமா வாழறேன்'னு காட்டிக்கொள்ள தான் பணம் தேவைப்படுகிறது. உண்மையில், சந்தோஷமாக வாழ பணம் ஒரு பொருட்டே இல்லை, நோய் வரும் வரை உண்பவன், உடல் நலமாகும் வரை உண்ணாதிருக்க வேண்டி வரும்! பணம் சம்பாதிப்பது குண்டூசியால் பள்ளம் தோண்டுவது போல, ஆனால் செலவழிப்பது குண்டூசியால் பலூனை உடைப்பது போல..! பணத்தின் மதிப்பு தெரியவேண்டுமா? செலவு செய்யுங்க.....!

உங்களின் மதிப்பு தெரியவேண்டுமா?.. கடன் கேளுங்க.! பிச்சை போடுவது கூட சுயநலமே... புண்ணியம் கிடைக்கும் என்று நினைத்தால்... அனுபவத்தால் உணரவேண்டிய ஒன்றை ஆயிரம் தத்துவ ஞானிகளாலும் உணரவைக்க முடியாது. வாழ்க்கையில் கற்றுக்கொள்வதில் குழந்தை போல் இரு அதற்கு அவமானம் தெரியாது விழுந்தவுடன் அழுது முடித்து திரும்பவும் எழுந்து நடக்கும்..!!

வெட்டாதீர்கள் மழை தருவேன் என்கிறது "மரம்". வெட்டுங்கள் மழை நீரைசேமிப்பேன் என்கிறது "குளம். திருமணம் ஒரு ஆண் நல்ல கடந்தகாலம் கொண்ட பெண்ணையும் ஒரு பெண் நல்ல எதிர்காலம் கொண்ட ஆணையும் தேடுவது.!! முன்னே செல்பவனை விட்டுவிடுங்கள் பின்னால் வருபவனிடம் மட்டும் கொஞ்சம் எச்சரிக்கையாய் இருங்கள். அவனால்தான் உங்களை முந்திச்செல்ல முடியும். மீண்டும் ஒரு முறை முகம் பார்த்து பேசவேண்டியிருக்கும் என்ற ஒரு காரணத் திற்காகவே நம்முடைய பல கோபங்கள் தற்கொலை செய்து கொள் கின்றன

நேர்மையாக சம்பாதித்த பணம் பெரும்பாலும் கோயில் உண்டியல்களுக்கு வருவதில்லை.

இவ்வுலகில் வாழ கற்றுக் கொண்டதை விட வலிகளை மறைத்து சிரிக்க கற்றுக் கொண்டதே அதிகம்....!

பகலில் தூக்கம் வந்தால், உடம்பு பலவீனமா இருக்குனு அர்த்தம்..!! இரவு தூக்கம் வரலைனா மனசு பலவீனமா இருக்குனு அர்த்தம்..! துரோகிகளிடம் 'கோபம்' இருக்காது கோபப்படுபவர்களிடம் 'துரோகம்' நிச்சயமாக இருக்காது.. தன்னை நல்லவராக காட்டிக் கொள்ள அடுத்தவரை கெட்டவராகச் சித்தரிக்கும் எவரும் நீண்ட நாள் நல்லவர் வேடத்தில் சுற்ற முடியாது.



# சூரியனை பார்த்தால் சூப்பர் சக்தி கிடைக்கும்' நாசா தகவல்..!

அதிகாலையில் சூரியனின் கதிர்களை வெறும் கண்ணால் பார்த்து வணங்குவது இந்தியாவில் பண்டைய வழிபாட்டு முறைகளில் ஒன்றாக இருக்கிறது. இந்தியாவில் யோகக் கலைகளில் ஒன்றாக பார்க்கப்படும் சூரியனை பார்க்கும் வழக்கமானது, பண்டைய மாயன் நாகரீகம், எகிப்து, திபெத் ஆகிய நாடுகளில் பல்வேறு பெயர்களில் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் சூரியனை பார்த்தால் டெலிபதி போன்ற 'Super Human Abilities' எனப்படும் சிறப்பு சக்திகள் கிடைக்கும் என்றும் உணவு உண்ணாமல் கூட வாழலாம் எனவும் நாசா அமைப்பு உறுதிப் படுத்தியுள்ளது.

பொதுவாக சூரியனை பார்த்தால் உடலில் உள்ள நோய் எதிர்ப்புத் திறன் அதிகரித்து, உடல் ஆரோக்கியமாக இருக்கும் என இந்தியாவில் நம்பப்பட்டு வருகிறது.

எனவேதான் சூரியனை பார்த்து வணங்குவது, முக்கியமான வழிபாட்டு முறையாக இந்தியாவில் அறியப்படுகிறது. ஆனால் சூரியனை வெறும் கண்ணால் பார்ப்பதன் மூலம் நாம் எதிர்பார்க்காத சக்திகளை பெற முடியும் என ஆச்சரியப்படுத்தியுள்ளது நாசா. சூரியனை பார்ப்பது என்பது சூரியனிலிருந்து வரும் புற ஊதாக்கதிர்களின் தாக்கம் குறைவாக இருக்கும் அதிகாலை நேரத்தில் சூரியனை பார்ப்பதாகும். இந்த செயல்முறையின் போது நாம் வெறும்காலுடன் இருத்தல் அவசியம்.

பூமிக்கும் சூரியனுக்குமான ஒரு இணைப்புப் பாலமாக நாம் செயல்பட வேண்டும். இதனை தொடர்ச்சியாக, சரியான முறையில் ஈடுபடுபவர் களுக்கு குறிப்பிட்ட காலகட்டத்திற்கு பிறகு உணவுத் தேவை என்பது மிகக்குறைவாக இருப்பதாக ஆய்வு முடிவில் தெரியவந்துள்ளது. தன்னை 'சூரியக்கதிர்களை உண்பவன்' என அழைத்துக் கொள்ளும் இந்தியாவைச் சேர்ந்த "ஹிரா ரத்தன் மானக்" என்பவர் தன்னை ஆராய்ச்சி செய்யுமாறு நாசா விஞ்ஞானிகளை அணுகினார். நாசாவினால் நிதியுதவி பெறக்கூடிய பென்சில்வேனியா மருத்துவர்கள் குழு அவரை ஆராய்ச்சி செய்த போது, பல ஆச்சரியத்தக்க தகவல்கள் கிடைத்தன. சூரிய ஒளி மூலம் கிடைக்கும் சிறப்பு சக்தியால் அவர் உணவு உண்பதே இல்லை என மருத்துவர்கள் அறிந்தனர். 100 நாட்களுக்கு அவரை தங்கள் கண்காணிப்பில் வைத்திருந்த மருத்துவர்கள், ஹிரா ரத்தன் மானக்கினால் சூரிய ஒளியை ஆற்றலாக எடுத்துக் கொண்டு உயிர்வாழ முடிகிறது எனவும் இந்த காலகட்டத்தில் சிறிதளவு தண்ணீர் மற்றும் மோர் மட்டுமே அவர் எடுத்துக் கொண்டதாகவும் தெரிவித்துள்ளனர். முதல் மூன்று மாத காலத்திற்கு சூரியனை பார்க்கும் போது சூரியனின் ஆற்றலானது கண்கள் வழியாக சென்று 'ஹைபோதாலமஸ் பாதை 'என்ற அங்கத்தில் தனது சக்தியை சேர்க்கிறது.

கண்களில் உள்ள ரெட்டினாவுக்கும் மூளைக்கும் தொடர்பு ஏற்படுத்திக் கொடுக்கும் பாதையே 'ஹைபோதாலமஸ் ' என அழைக்கப்படுகிறது. இதன் பின்னர் இந்த பாதை வழியாக சூரிய ஆற்றலானது மூளையை அடைகிறது. அதன் பின்னர் மன அழுத்தம், பசி ஆகியவை சிறிது, சிறிதாக குறையத் தொடங்குமாம். மேலும் மனிதனிடம் உள்ள எதிர்மறை எண்ணங்கள், கெட்ட பழக்க வழக்கங்கள் மறைந்து போகுமாம். சூரியனை பார்த்தல் செயல்முறையை செய்யத் தொடங்கிய 3 மாதங்களிலிருந்து 6 மாதத்திற்குள், உடல் உள்ள நோய்கள் மறைந்து போகுமாம்.

இதற்கு காரணம் சூரியனிலிருந்து வெளிப்படும் வண்ணங்கள், நம் உடலில் உள்ள பல்வேறு பாகங்களில் ஏற்பட்டுள்ள நோய்களை குணப்படுத்துவதுதான்.

வண்ண மருத்துவம் எனப்படும் துறையைச் சேர்ந்த மருத்துவர்களும் இதனை உறுதிப்படுத் தியுள்ளனர். குறிப்பாக கல்லீரல் நோய்களுக்கு பச்சை நிறமும், இதயத்திற்கு மஞ்சள், சிறுநீரகத்திற்கு சிவப்பு ஆகிய வண்ணங்கள் குணமளிக்கின்றனவாம். இப்படி வானவில்லில் இருக்கக் கூடிய அனைத்து வண்ணங்களும் சூரிய ஒளி வழியாக நம் உடலில் புகுந்து நோய்களை போக்குகிறதாம். வண்ண மருத்துவம் என்ற கோட்பாட்டின் கீழ் தான் பல வண்ணங்களில் இருக்கக் கூடிய சரிவிகித உணவை எடுத்துக் கொண்டால்



நோய்கள் அண்டாது என கூறப்படுகிறதாம்.

சூரியனை பார்த்தல் செயல்பாட்டின் நிபுணர்கள், உடலுக்கு தேவை உணவு இல்லை எனவும் அதிலிருந்து கிடைக்கும் ஆற்றல்தான் உடலை இயக்க தேவை எனவும் கூறுகின்றனர். அந்த ஆற்றலானது சூரிய ஒளி மூலமே கிடைத்துவிடுவதால், உணவு தேவைப்படுவதில்லை எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் சூரியக்கதிர்களை நேரடியாக பார்ப்பது கண்களில் உள்ள ரெட்டி னாவுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என கண் மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் சரியான நேரத்தில், சரியான வழிமுறையில் சூரியனை பார்த்தால் கண்களுக்கு பாதிப்பு ஏற்படாது எனவும் அவர்கள் கூறுகின்றனர். சூரியனை பார்ப்பதை பல ஆண்டுகளாக செய்து வருபவர்களின் கண்களை சோதித்த போது, அவர்களின் கண்களில் எந்த பாதிப்பும் இல்லை என்பதும் தெரியவந்துள்ளது.

# பொருள் அறிவோமா ?...

| | |
|---|---|
| பசுமைப் புரட்சி | - விவசாய உற்பத்திப் பெருக்கம். |
| வெண்மை புரட்சி | - பால் உற்பத்திப் பெருக்கம். |
| நீலப் புரட்சி | - மீன், கடல் உயிர் உற்பத்திப் பொருக்கம். |
| மஞ்சள் புரட்சி | - எண்ணெய் வித்து உற்பத்திப் பெருக்கம். |
| பிரவுன் புரட்சி | - மரபுசாரா எரிபொருள் பெருக்கம். |
| இளஞ்சிவப்பு புரட்சி | - இறால் உற்பத்திப் பெருக்கம். |
| நீலப் புத்தகம் | - பிரிட்டிஷ் அரசாங்க அறிக்கைகள். |
| எல்லோ புத்தகம் | - பிரெஞ்சு அரசாங்க அறிக்கைகள் |
| கிரே புத்தகம் | - ஜப்பானிய, பெல்ஜிய அரசாங்க அறிக்கைகள் |
| ஆரஞ்சுப் புத்தகம் | - நெதர்லாந்து அரசாங்க அறிக்கைகள் |
| வெள்ளைப் புத்தகம் | - போர்ச்சுகல், சீன அரசாங்க அறிக்கைகள். |
| பச்சைப் புத்தகம் | - இத்தாலிய, ஈரானிய அரசாங்க அறிக்கைகள். |
| வெள்ளை அறிக்கை | - இந்திய அரசாங்க அறிக்கை |

S.Surya
STD VII
SHERWOOD
HALL SENIC
SECONDARY SCHOOL
CHENNAI






இவரிடம் ஆலோசனை பெற்ற பின்பு திரைப்பட புகைப்பட கலைஞர் ரவி.கே.சந்திரன் அவர்களின் திரைவாழ்வில் வசந்தம் வீசியது!





வாஸ்து சரியானால் எல்லாம் சரியாகும்! வாஸ்து நிபுணர் பிரகாஷ் ஐயங்கார் சொன்னால் எதுவும் சரியேயாகும்! பெயர், புகழ், வெற்றி, நல்ல உடல் நலம், உற்றாருடன் நல்லஉறவு, நல்ல வாய்ப்புகள், ஆகியவை அமைய வாஸ்து நிபுணர்.பிரகாஷ் ஐயங்காரிடம் ஆலோசனை பெறலாம்.

Vanakkam

This is Prakassh Iyengar and I am practicing the science of Vaastu Shastra for more than 17 yrs .My work involves giving solutions to people who are facing problems related to wrong Vaastu construction. Remember that You should have faith to get maximum benefits. Doubts Do not bring results.

My work is Quality oriented. I use best of the best remedies to solve Vaastu related problems. Samruddhee Vaastu is the name under which I am practicing Vaastu. (Samruddhee means prosperity and growth) Services provided Vaastu Consultation for bungalows, flats, factories, offices, open plots, farm houses and all multistorey buildings. Purification of plot with spiritual process. Correction of Vaastu by removing the Vaastu Dosham And Bhoomi Dosham Providing spiritual Vaastu remedies in the form of powerful yantram and other spiritual items. Making the space very positive by connecting it with Universal Divine Vibrations. Checking the energy of the place with Dowsing method to find out the faults in Vaastu and then correction is done with spiritual methods. Services are offered to businessmen, politicians, celebrities of bollywood, and to people from various background all over India and internationally in Countries like USA, Amsterdam, Singapore, Canada, Dubai. Spiritual Solutions Are Given For Different Life ProblemsAll the Spiritual remedies carry blessings of Gods and Godesses ,18 tamil Siddhargal, Mahavtar Babaji And Divine Mother Buwaneshwari. For Flats Vaastu Correction is done without modifying the original structure. I pray for everyone to live in a blessed house.

PrakasshIyengar

contact 09920443583
shivaprakkash9@gmail.com



Owned and published by M.SUNDARAMOORTHY from No.602 Suruthi Block, Chitra Avenue,9, Choolaimedu High Road, Chennai-600 094. and printed by him at SRI PADMALAYA PRINTERS. No.8/18, Manali Salai, Korukkupet, Chennai-600 021.
Editor : M.SUNDARAMOORTHY.

MITRA TIMES Tam & Eng Monthly Postal Registration No. TN/CH(C)/523/16-18
Registered with Registrar of News Paper for India Under No.TNBIL/2015/64028 - Date of publishing 1st week of Every Month

# சித்தர்கள் காட்டிய நெறிமுறைப்படி...











- குழந்தையின்மை
- சிறுநீரகக்கோளாறு
- இருதய அடைப்பு
- இரத்த அழுத்தம்
- சர்க்கரை நோய்
- கொழுப்புக்கட்டி
- சோரியாசிஸ்
- பல்வலி

**என மனிதனை ஆட்டிப் படைக்கும் எந்த நோய்க்கும் மூலிகைகள் மூலமாக சித்தர்கள் காட்டிய நெறிப்படி குணமாக்கப்படும்.**

**Herbal Kannan**
2/147 Mangammal Koil Street,
Khansapuram,Watrap
virudhunagar district
Tamilnadu.626133
EMail: herbalkannan@gmail.com
www.sathuragiriherbals.com
Mobile No: 9943205566 / 9894912594
Landline No: 04563-282222

